பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ராம்கோ சீமெந்து

# வலம்புரி

Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஆவணி 24 | புதன்கிழமை | (10.09.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 265

# புலித்தேவன் - பேணாட் குணதிலக சுவிஸ்லாந்தில் சந்தித்துப் பேச்சு

## திட்டவரைபு குறித்து ஆராய்ந்ததாகத் தகவல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப பணிப்பாளர் புலித்தேவனுக்கும் அரசின் சமாதான செயலகப் பணிப்பாளர் பேணாட் குணதிலகவுக்கும் இடையில் சுவிஸ்லாந்தில் முக்கிய பேச்சுவார்த்தை இடம் பெறுவதாகஇராஜதந்திர வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீளவும் ஆரம்பித்தல், மற்றும் விடுதலைப் புலிகள் தயாரித்துள்ள இடைக் கால நிர்வாக சபைத் திருத்த நகல் என்பன குறித்து இச் சந்திப்பில் முக்கியமாக ஆராயப்பட்டு வருவதாக தெரியவருகிறது.

இதன்போது புலிகளின் நிலைப் பாட்டை புலித்தேவனும் அரசின் நிலைப்பாட்டை பேணாட் குணதிலகவும் ஒருவருக்கொருவர் விளக்குவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

சுவிஸ் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்காக புலித்தேவன் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு கட்டுநாயக்கா ஊடாக சுவிஸ்லாந்து பயணமானார் எனவும் மறுநாள் திங்கட்கிழமை பேணாட் குணதிலகவும் அங்கு பயணமானார் எனவும் சமாதான செயலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். இப் பேச்சுவார்த்தையின் போது இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு நகல் வரைபு குறித்து அரசும் புலிகளும் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான நாள் குறிக் கப்படலாமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளை விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் சுவிஸ் லாந்தில் நடைபெறும் சமாதான மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அங்கு சென்றுள்ளதாக புலிகளின ஊடகப் பேச்சாளர் தயாமாஸ்ரர் தெரிவித்தார். (இ-10)

# சமாதானப் பேச்சுகளில் மீண்டும் தடைகள் ஏற்படும் வாய்ப்பு உண்டு



மலேசியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை மலேசியப் பிரதமர் கலாநிதி மஹாதிர்முகமது கைலாகு கொடுத்து வரவேற்கும் காட்சி

## பிரதமர் ரணில் மலேசியாவில் தெரிவிப்பு

(நமது நிருபர்)

**இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே மீண்டும் ஆரம்பமாகி நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுக்கள் முன்னைய பேச்சுக்களைவிட மிகவும் கடினமாக இருக்கும். பேச்சுக்கள் முன்னேற்றகரமாகச் செல்லும் போது ஓரிரு தடைகள் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்று மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரில் தெரிவித்துள்ளார்.**

இரண்டுநாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு மலேஷியா சென்றிருந்த இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கோலாலம்பூரில் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அச் செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற்று வந்த ஆறுசுற்று சமாதானப் பேச்சுவார்த்தைகள் கடந்த ஏப்ரல் மாதத்துடன் தடைப்பட்டுப் போனது., எனினும் தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சு வார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும்.

எனினும் பேச்சு வார்த்தைகளை மீண்டும் செப்ரெம்பர் மாதத்திலா? அல்லது ஒக்ரோபர் மாதத்திலா ஆரம்பிப்பது என்று இன்னமும்

(10ம் பக்கம் பார்க்க)

# டென்மார்க் தூதுவர் இன்று தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

டென்மார்க் தூதுவர் மைக்கேல் ஸ்ரேன்பேர்க் இன்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் தூதுவர் இன்று காலை ஏ-9 கண்டி வீதியூடாக கிளிநொச்சிக்குச் சென்று அங்கு புலிகளின் அரசியல் துறை நடுவச்செயலகத்தில் தமிழ்ச் செல்வனை சந்திக்கவுள்ளார்.

இச்சந்திப்பின் போது இடை நிறுத்தப்பட்டிருக்கும் பேச்சுக்களை மீள ஆரம்பித்தல் மற்றும் இன்றைய சமகால அரசியல் நிலைமை குறித்தும் ஆராயப்படவுள்ளது. (இ)

# புலிகளின் திட்டவரைபில் அரசு மாற்றம் செய்தால் புலிகள் பேச்சுக்களில் இருந்து விலகுவர்!

(கொழும்பு)

வடக்கு கிழக்கிற்கான இடைக் கால நிர்வாக சபை குறித்து விடுதலைப் புலிகளின் திட்ட வரைபில் அரசாங்கம் ஏதாவது மாற்றம் செய்ய முற்பட்டால் விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களிலிருந்து முற்றாக விலகுவர் என இராஜதந்திர வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

இடைக்கால நிர்வாகசபை தொடர்பில் விடுதலைப் புலிகளின் கோரிக்கைகள் அடங்கிய யோசனைகள் அரசின் திட்ட வரைபுக்குப் பதிலாக சர்வதேச சட்ட வல்லுனர்களின் ஆலோசனையுடன் பிரான்சின் தலைநகர் பாரிஸில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு ஏற்ப மிகத் தெளிவாகத் தயாரிக்கப்பட்டதாகும்.

இத் திட்ட வரைபில் அரசாங்கம் ஏதாவது மாற்றத்தையோ, அல்லது

(10ம் பக்கம் பார்க்க)

# செல்வச் சந்நிதியானின் தேர் அச்சு உடைந்ததில் சரிந்தது

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற தொண்டமனாறு செல்வச்சந்நிதி முருகன் தேரில் ஆரோகணித்து பவனி வந்து கொண்டிருந்த போது திடீரென தேர்ச் சகடையின் அச்சு உடைந்ததில் தேர் சரிந்தது.

இதனையடுத்து தொடர்ந்து தேரை இழுக்க முடியாததனால் தேரில் இருந்து சுவாமி இறக்கப்பட்டு வாகனக் கொம்பில் வீதியுலா இடம் பெற்றது.

நேற்று தேர் உற்சவத்தை கண்டு தரிசிப்பதற்காக பெருந்திரளான பக்தர்கள் ஆலயத்தில் அலை மோதினர்

ஜன சமுத்திரத்தின் மத்தியில் 'அரோகரா' எனும் ஓசை வானைப் பிளக்க முருகன் தேரில் ஆரோகணித்து பவனி வந்து கொண்டிருந்த போது, ஆலயத்தின் மேற்கு வீதி

(10ம் பக்கம் பார்க்க)

# தமிழகத்திலிருந்து 23 அகதிகள் நேற்று நெடுந்தீவுக்கு வந்தனர்


(நெடுந்தீவு)

தமிழகம் இராமேஸ்வரத்திலிருந்து ஈழத் தமிழ் அகதிகள் 23 பேர் நேற்றுக் காலை 8 மணியளவில் நெடுந்தீவு மேற்கு பனங்காணியை வந்தடைந்தனர்.

இந்திய மீனவர்களின் படகுகள் மூலம் வந்தடைந்த அகதிகள் அனைவரும், பொலிஸ் விசாரணையின் பின்னர் நெடுந்தீவு பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று மாலை தங்கவைக்கப்பட்டனர்.

இன்று காலை யாழ்ப்பாணம் அழைத்து வரப்படும் அவர்கள் உரிய இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவர்.

அகதிகளில் 10 பேர் நெடுந் தீவைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (த-48)



# சட்ட விரோதமாகத் தங்கியிருந்து மீன்பிடிக்கும் இந்திய மீனவர்கள் வெளியேற 15 ஆம் திகதி வரை அவகாசம்

(யாழ்ப்பாணம்)

மாலைதீவு, கக்கூடைதீவு போன்ற தீவுகளில் தங்கியிருக்கும் இந்திய மீனவர்கள் எதிர்வரும் 15ம் திகதிக்கு முன்னர் அங்கிருந்து வெளியேறி விடவேண்டும் என வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம் அவகாசம் வழங்கியுள்ளது.

மாலைதீவு, கக்கடைதீவு ஆகியவற்றில் இந்திய மீனவர்கள் சட்ட விரோதமாக தங்கியிருந்து மீன்பிடித் தொழிலை செய்து வருகின்றதால் தாம் தொழில் செய்ய முடியாது இருக்கின்றதாக சம்மந்தப்பட்ட பகுதி மீனவர்கள் பல தடவைகள் செய்த முறைப்பாட்டினையடுத்தே இக்கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்களுக்கு எதிராக கடற்படையினரும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்ள இச்சமாசம் எதிர்வரும் 15 ஆம் திகதிக்குப் பின்னரும் மீன்பிடித் தொழிலில் இந்திய மீனவர்கள் ஈடுபட்டு வருவார்களாயின் அவர்களைப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைக்க வேண்டிய நிலை ஏற்படும் என்றும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. (உ-10)

# ஓய்வூதியத் திணைக்கள நடமாடும் சேவை யாழில்


(உடுவில்)

இலங்கை ஆசிரியர் சங்க தூதுக் குழுவின் வேண்டுகோளின் பிரகாரம் நடமாடும் சேவை ஒன்றினை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு ஓய்வூதிய திணைக்களம் சம்மதம் தெரிவித்துள்ளது.

விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய திணைக்கள பணிப்பாளர் ரி. விஜயசிங்கவை கடந்த மாதம் சந்தித்த இலங்கை ஆசிரியர் சங்க தூதுக்குழு, வடக்கு கிழக்கு மாகாணத்தில் பல ஆசிரியர்கள் விதவைகள், அநாதைகள் ஓயவூதிய பதிவு இலக்கம் பெறாமல் இருப்பதை சுட்டிக்காட்டி, நடமாடும் சேவை ஒன்றினை நடத்தும்படி கோரிக்கை விடுததது.

அவர்களின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட பணிப்பாளர், விரைவில் நடமாடும் சேவை ஒன்றை நடாத்துவதாகவும் அதற்கு, தேவையான படிவங்களை வலயக் கல்விப் பணிமனைகளுக்கு அனுப்பி வைப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இது சம்பந்தமான பிரச்சினைகளையுடையவர்கள் தத்தமது வலயக் கல்விப் பணிமனைகளுடன் தொடர்பு கொள்ளுமாறும் இலங்கை ஆசிரியர் சங்க உப செயலாளர் அ. பாலச்சந்திரன் கேட்டுள்ளார். (உ-261)





# 25 வருடங்களின் பின்னர் திருத்தப்படும் வீதிகள்

(மட்டக்களப்பு)

இராணுவக் கட்டுப்பாடற்ற படுவான் கரைப்பகுதியில் கடந்த 25 வருடங்களின் பின்னர் வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இவ் வீதிகள் நோர்வே அரசாங்கத்தின் நொறாட் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இவ்வீதிகள் 3 கட்டங்களாக புனரமைக்கப்படவுள்ளது. முதற் கட்டமாக புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு என 270 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.


இவ்வீதி புனரமைப்பு நடவடிக்கைகளை நோர்வேத் தூதுவர் விஹான்ஸ் பீற்றர்சன் நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார். (தி)

# கிறான்பாஸில் 23 பேர் கைது

(கொழும்பு)

கிறான்பாஸ் பகுதியில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட திடீர் தேடுதல் நடவடிக்கைகளின் போது, 23 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 19 பேர் போதைப் பொருள் விற்பனையுடன் தொடர்புடையவர்கள் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. (தி)



யுனெஸ்கோ மற்றும் டென்மார்க் அரசின் அனுசரணையுடன் யாழ் குடாநாட்டுப் பத்திரிகை நிறுவனங்களுக்கு நேற்றைய தினம் கணனிகள் வழங்கப்பட்டன. இதன் போது யாழ். பல்கலைக் கழக கேட்போர் கூடத்தில் டென்மார்க் தூதுவர் மைக்கேல் ஸ்ரேண்பேர்க், பேராசிரியர் சிற்றம்பலம் மற்றும் பத்திரிகையாளர்கள் பங்கு கொண்ட நிகழ்வின் காட்சிகள்.

# மறவன்புலோ மத்தி, உருக்குலைந்து ஹிரோசிமா போல் காணப்படுகிறது

## அங்கு சென்று வந்தவர் தகவல்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியில் அதி உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ள மறவன்புலோ மத்தி, யப்பானில் வீசப்பட்ட அணுக்குண்டினால் நாசமாக்கப்பட்ட ஹிரோசிமா போல் காட்சியளிக்கிறது.

இவ்வாறு, அண்மையில் அங்கு சென்று திரும்பிய மறவன்புலோ பெரிய தம்பிரான் ஆலய தர்மகத்தா சபையின் தலைவர் செ.ஆனந்தரஞ்சன் தெரிவித்தார்.

அல்லாரையிலுள்ள 521வது படையணியின் சிவில் நிர்வாக அலுவல்களுக்குப் பொறுப்பான மேஜர் கே.எல்.யூ. குணசிங்காவின் அனுமதி பெற்று கடந்த 4 ஆம் திகதியன்று அங்கு சென்ற இவர் மேலும் கூறுகையில்,

பெரியதம்பிரான் ஆலய கட்டடங்கள் யாவும் விமானக் குண்டு வீச்சின் காரணமாக அழிந்துள்ளதுடன் ஆலயச் சூழலில் நின்றிருந்த மரங்கள் எதையும் காணவில்லை.

ஆலயத்தின் விக்கிரகங்கள அனைத்தும் திருடர்கள் வசமாகிவிட்டதையும் நேரில் பார்த்த போது உணர முடிந்தது. மறவன்புலோ வள்ளங்குளம் வீரகத்தி விநாயகர் ஆலய மடப்பள்ளி மிகவும் சேதமடைந்துள்ளது.

இவ் ஆலயத்திற்கு அருகில் காணப்பட்ட வீடுகள் மற்றும் கட்டடங்கள் உருக்குலைந்த நிலையில் காணப்படுகின்றன என்று குறிப்பிட்டார். (பி-16)

# பன்னிரு கலைஞர்கள் பாராட்டிக் கௌரவிப்பு

(பருத்தித்துறை)

உள்ளூராட்சி வாரத்தையொட்டி கரவெட்டி பிரதேச சபைப்பிரிவிலுள்ள 12 கலைஞர்கள் பிரதேச சபையால் கௌரவிக்கப்பட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

பிரதேச சபைச் செயலாளர் எஸ். பசுபதி தலைமையில் நடைபெற்ற இவ் விழாவிலேயே, பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி. கிருஷ்ணசாமியும், சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ். கதிரவேற்பிள்ளை, வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் ரீ:சத்தியசீலன், கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்க இயக்குநர் சபைத் தலைவர் ரீ.சிதம்பரப்பிள்ளை ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கௌரவம் பெற்ற கலைஞர்களின் விபரம்,

இசை நாடகம் - கே.கந்தையா, எம்.அனந்தராஜன்; சமூக நாடகம்-ரீ.சத்தியசீலன்; சிந்துநடைக் கூத்து-கே.சின்னத்தம்பி, எஸ்.கனகன், கே. தவராஜா; மேடை நாடகம் - கே.பழனி; இச்சை நாடகம்-வி.வேலாயுதம்; நாடகம், கர்நாடக சங்கீதம், பண்ணிசை- எம். வேதாரணியம்; நாதஸ்வரம் - எஸ். ஜெகநாதன்; ஆர்மோனியம் - ஏ.தங்கராசா; மிருதங்கம் பாட்டு-கே.நாராயணசாமி. (உ-52)

# கியூடெக் நிறுவனத்தினால் வடபகுதியில் சுமார் 600 வீடுகள் மூன்று வருடங்களில் நிர்மாணம்

(யாழ்ப்பாணம்)

கடந்த மூன்று ஆண்டுகளில் கியூடெக் நிறுவனம் 600க்கும் மேற்பட்ட வீடுகளை வடபகுதியில் நிர்மாணித்துள்ளது.

நிறுவனத்தின் அண்மைக்கால செயற்பாடுகள் பற்றி விளக்கமளித்த அதன் நிர்வாகப் பணிப்பாளர் வணபிதா சீ.ஜீ.ஜெயக்குமார் அவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

60ஆயிரம் ரூபா பெறுமதியான இவ் வீடுகள் தீவகம், வலிகாமம் வடக்கு, வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் வறுமைப்பட்ட மக்களுக்காக அமைக்கப்பட்டுள்ளன.

இவற்றிற்கான கட்டடப் பொருட்களை எமது நிறுவனமே வழங்கியிருந்தது.

அத்துடன் அல்லைப்பிட்டி, மண்கும்பான், வேலணை, சாட்டி போன்ற இடங்களிலும் தற்காலிக வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி, யாழ்ப்பாணம், தீவகம் ஆகிய இடங்களில் 103 மலசல கூடங்களை அமைத்தும் 75 கிணறுகளை புனரமைத்தும் கொடுத்துள்ளோம் என்று தெரிவித்தார். (உ-16)

# கட்டுரை, கவிதை போட்டிகள்

(கந்தரோடை)

சர்வதேச முதியோர் தினம் மற்றும் சர்வதேச சிறுவர் தினம் ஆகியவற்றை முன்னிட்டு சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையில் நடாத்தப்படவுள்ள கட்டுரை மற்றும் கவிதைப் போட்டிகள் எதிர் வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை பி.ப 2.00 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம் பெறும் என சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப்பணிப்பாளர் க.தனபாலசிங்கம் அறிவித்துள்ளார். (க-103)

# மயக்க மருந்து தெளித்து வீட்டில் திருட்டு

(கொழும்புத்துறை)

கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள பலசரக்குக் கடையொன்றின். பின்னாலுள்ள வீடொன்றில் இரவு நேரம் உட்புகுந்த திருடர்கள் பணம், நகைகள் உட்பட ரீ.வி, டெக் மற்றும் பெறுமதி மிக்க மின் உபகரணங்கள் பலவற்றைச் சூறையாடிச் சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இத் திருட்டுச் சம்பவத்தில் மேற்படி வீட்டில் காவலுக்கு இருந்த நாய்க்கும் வீட்டில் இருந்தவர்களுக்கும் மயக்க மருந்து தெளித்துவிட்டு திருட்டு நடந்திருப்பதாகக் கூறப்படுகிறது. இது குறித்து பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (பி-51)

# நீர்கொழும்புச் சிறைச்சாலை கைதியின் தற்கொலை முயற்சி முறியடிப்பு

(கொழும்பு)

நீர்கொழும்புச் சிறைச்சாலை விளக்கமறியல் கைதி ஒருவரினால் மேற்கொள்ளப்பட்ட தற்கொலை முயற்சியினை சிறைச்சாலை அதிகாரிகளும் சக கைதிகளும் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

புத்தளம் வாசியான மேற்படி கைதி நேற்று அதிகாலை 2.15மணியளவில் தான் அணிந்திருந்த சாரத்தின் உதவியுடன் தூக்குப் போட முயற்சி செய்த போது, அதனைக் கண்ட சக கைதிகள் சிறைச்சாலை அதிகாரியிடம முறையிட்டதை அடுத்து தற்கொலை முயற்சி நிறுத்தப்பட்டது.

இந் நபர் தூக்குப் போட முயன்றதற்கான காரணம் இன்னமும் தெரியவில்லை என நீர்கொழும்பு சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தற்போது இவர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (தி)

# சண்டிலிப்பாய்க் கோட்டத்தில் உதைபந்தாட்டப் போட்டி

(கந்தரோடை)

சண்டிலிப்பாய்க் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று முதல் இடம்பெறவுள்ளன.

முறையே யா/மானிப்பாய் இந்து கல்லூரி, யா/புனித ஹென்றியரசர் கல்லூரி ஆகியவற்றில் பி.ப 2.30 மணிக்கு இடம்பெறவுள்ள இப்போட்டிகளின் விபரம் வருமாறு,

14 வயதின் கீழ்ப்பிரிவு

புனித ஹென்றிரசர் கல்லூரி எதிர் நவாலி மகா வித்தி.மானிப்பாய் இந்துக்கல்லூரி எதிர் சண்.இந்துக் கல்லூரி. மானிப்பாய மெமோறியல் எதிர் உயரப்புலம் குணபாலன் வித்தி.

16 வயதின் கீழ்ப்பிரிவு

புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் மாதகல சென்ற் யோசேவ் வித்தி.சண்.இந்துக்கல்லூரி எதிர் பண்டத்தரிப்பு ஜசிந்தா ஆர்.சி. மானிப்பாய் இந்துக்கல்லூரி எதிர் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை. (உ-103)

# செய்தித்துளிகள்

## விசேட ரோந்து

(கொழும்பு)

வெளி இடங்களில் இருந்து கொழும்பு நகருக்கு வரும் பயணிகள் மற்றும் சுற்றுலாத் துறையினரைப் பாதுகாப்பதற்காக விசேட ரோந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனநத ராஜா அறிவித்துள்ளார்.

அண்மைக்காலங்களாக கொழும்பு நகருக்குவரும் பயணிகள் மற்றும் சுற்றுலாத் துறையினரிடம் இருந்து, சில கோஷ்டிகள் பரிசோதனை செய்யும் பாவனையில் அவர்களின் உடைமைகளைக் கொள்ளை யடித்து வருவதாக கிடைக்கப்பெற்ற முறைப் பாடுகளைக் அடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (தி)

## வடமராட்சி லயன்ஸ்கழக நிர்வாகிகள்

(பருத்தித்துறை)

வடமராட்சி லயன்ஸ்கழகத்தின் நடப்பு வருட நிர்வாகிகள் பதவிப்பிர மாணவைபவம் நெல்லியடியிலுள்ள லயன்ஸ் பி.கதிரமலையின் இல்லத் தில் நடைபெற்றது.

இவ்வைபவத்திலே லயன் டாக்டர் வி.யோகேஸ்வரன், லயன் சீமாட்டி டாக்டர் யாழினி ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டனர்.

வடமராட்சி லயன்ஸ்கழக தலை வராக லயன் பீகதிரமலையும், செயலாளராக லயன் என்தங்கராஜா வும் (ஜேபி யூஎம்),பொருளாளராக லயன் எஸ்.சுப்பிரமணியமும் (ஜே.பி) ஏனைய உறுப்பினர்களும் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர். (பி-52)

## நடமாடும் ஆய்வுகூடம்

(மருதங்கேணி)

உலக சுகாதார நிறுவனம் கொழும்பில் முதலாவது நடமாடும் ஆய்வுகூடம் ஒன்றை அண்மையில் அமைத்துள்ளது.

இத்திட்டம் வடக்கு-கிழக்கில் திருகோணமலை மாவட்டத்தில் முதன்முதலாக அமுல்படுத்தப் பட்டுளளது.

வடகிழக்கு மாகாணத்தில் யுத்தத் தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிறப்பான வைத்திய சேவையை வழங்குவதே இதன் நோக்கமாகும். (பி-35)

## பசிகுறைப்பு மருந்து கண்டுபிடிப்பு

(அமெரிக்கா)

உடலின் ஊழைச் சதையை கட் டுப்படுத்தும் வகையிலான பசி உணர் வைக் குறைக்கும் புதிய மருந்தொன்றை அமெரிக்க மருத்துவர்கள் கண்டுபிடித் துள்ளனர்.

அதிக பசியுணர்வின் காரணமாக கட்டுப்பாடற்ற முறையில் உணவை உட்கொண்டு, அதிகரித்த உடல் எடையைக் குறைக்க உலகெங் கிலும் உள்ளவர்கள் பல்வேறு உடற் பயிற்சிகளை மேற்கொண்டு வருவது கண்கூடான உண்மை.

தொல்லைகளிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ளக் கூடியதான புதிய மருந்தை கலிபோர்னியா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் தற்போது உருவாக்கியுள்ளனர். (18)

## கண் அறுவைக்கு பதிவுசெய்தோருக்கு அழைப்பு

(மருதங்கேணி)

கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் கண் சத்திரசிகிச்சைக்கு பதிவுகளை மேற்கொண்டவர்கள் எதிர் வரும் 13ஆம் திகதி சனிக்கிழமை கண்சிகிச்சை நடைபெறும் நாளில் சமுகமளிக்கும்படி கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ச.விக்கி னேஸ்வரன் கேட்டுள்ளார். (பி-35)

## கிராம மக்களுக்கு நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

கிராமப்புற மக்களுக்குச் சலுகை அடிப்படையில் வாகனங்களையும், விவசாய உபகரணங்களையும் வழங்கு வதற்கு என அரசாங்கம் 200 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இதற்கென சீனாவில் இருந்து துவிச்சக்கரவண்டிகளும், விவசாய உபகரணங்களும் கொள்வனவு செய் யப்படவுள்ளதாக பிரதி நிதி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சீன அரசாங் கத்துடன் கிராமிய பொருளாதார அமைச்சு விரைவில் உடன்படிக்கை ஒன றைக் கைச்சாத்திடவுள்ளது. (தி)

## முன்பள்ளி இல்லாத குறை

(மருதங்கேணி)

அளம்பில் தங்கபுரம் கிராமத்தில் முன்பள்ளி இல்லாமையால் சிறுவர் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

இக்கிராமத்தில் 50குடும்பங்கள் வசித்து வருகின்ற போதும் இங்கு ஒரு முன்பள்ளிகூட இல்லாததால் சுமார் 25சிறார்கள் அடிப்படைக்கல்வ் ஏதுமின்றி காலத்தை வீணாக கழித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (பி-35)

## தொலைக்காட்சி அன்பளிப்பு

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை மாவட்ட வைத் தியசாலை நோயாளர்களின் நன்மை கருதி வர்த்தகரொருவர் சுமார் 50,000 ரூபா பெறுமதியான கலர்தொலைக் காட்சிப் பெட்டி ஒன்றையும் உபகரணங் களையும் அன்பளிப்புச் செய்துள்ளார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இந்திய வர்த்தகரான ரீ.முரளிதரன் என்பவரே அன்பளிப்புச் செய்தவரா வர். (52)

## ரூபா 40ஆயிரம் சுயதொழில் கடன்

(மருதங்கேணி)

பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தால்,ஒக்ஸ்பாம் நிறுவன உதவியுடன் இரத்தினபுரம் கிராமத் தில் சேமிப்பு கணக்கை ஆரம்பித்த 07 பயனாளிகளுக்கும் 40,000ரூபா பணம் சுயதொழில் கடனாக வழங்கப் பட்டுள்ளது.

மேற்படி சுயதொழில் கடன்வழங் கும் நிகழ்வு இரத்தினபுரம் முன்பள்ளி யில் ஒக்ஸ்பாம் நிறுவன இணைப் பாளர் மா.வினோ தலைமையில் அண்மையில் நடைபெற்றது. (க-35)

## தையல் பயிற்சி நிலையம்

(சில்லாலை)

அகதிகள் புனர்வாழ்வுக்கழகத்தின் சமூக மேம்பாட்டுப் பிரிவினரால் தாவடி ஸ்ரீகாளி அம்பாள் சனசமூக நிலையத் தில் தையல்பயிற்சி நிலையம் ஒன்று கடந்த 5ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு மேற்படி சனசமூக நிலையத் தலைவர் அ.நல்லதம்பியால் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது. (க-58)

## கட்டாக்காலிகளை பிடிப்பதற்கு ஏற்பாடு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேசசபை மந்திகை பிரதேசத்தில் கட்டாக்காலி ஆடு,மாடுகளைப் பிடிப்பதற்கான நடவடிக்கைகளைமேற் கொண்டுள்ளது. இப்பகுதிகளில் கட்டாக்காலி ஆடு, மாடுகளின் தொல்லை அதிகரித்திருப் பதாக மக்கள் புகார் செய்ததைய டுத்தே பிரதேச சபை இந்நடவடிக் கைகளை மேற்கொண்டள்ளது. (பி-52)


## அகத்தியர் தேவாரத் திரட்டு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருமறை மன்றம் மாதாந்தம் பௌர்ணமி தினத்தில் நடாத்திவரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல் மற்றும் பன்னிரு திருமுறைகள் பாராயணம் ஆகியன இன்று புதன்கிழமை காலை 8.00மணிக்கு ஏழாலை இலந்தகட்டி வைரவர் தேவஸ்தானத்தில் இடம் பெறவுள்ளன.

ஆத்மஜோதி நா.முத்தையா ஞாப கார்த்தமாக மன்றத் தலைவர் பண்டிதர் ல.பேரின்பநாயகம் தலைமையில் இந் நிகழ்வு நடைபெறவுள்ளது. (உ-18)

## நாட்டின் சொத்துக்கள் மேல் அக்கறை உள்ள மனிசர்...




# நாடு பிளவுறுவதைத் தடுக்கும் வல்லமை ஜனாதிபதிக்கு மட்டுமே உண்டு

## அக்காவுக்கு வக்காளத்து வாங்குகிறார் அனுரா

(கொழும்பு)

ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவதற்கு இன்னும் மூன்று ஆண்டு களே உள்ள நிலையில்,நாடு பிளவு படுவதைத் தடுக்கும் வல்லமை யும் நிறைவேற்று அதிகாரமும் ஜனாதிபதியின் கையிலேயே உள் ளது. எனவே தற்போதைய அரசைக் கலைத்து விட்டு பொதுத்தேர்தலை நடாத்துவதற்கு ஜனாதிபதி முன் வரவேண்டும்.

கடந்த ஞாயிற்ன்று மெனிக் கின்ன கூட்டுறவு மண்டபத்தில் இடம் பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களின் கூட்டத்தில் உரையாற்றும் போது கம்பஹா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டார நாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

எமது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும்,மக்கள் விடுதலை முன்ன ணிக்கும் இடையில் பிளவு ஏற்பட் டுள்ளதாக ரணிலும் ஐக்கிய தேசி யக் கட்சியினரும் கூறித்திரிவது சரி யானதல்ல.

மேற்படி இரு கட்சிகளுக்கும் இடையிலான பேச்சு[illegible] முறி வடைந்துள்ளது எ[illegible] வெளி யிடுவது வெறும் [illegible] மிக விரைவில் மீண்டும் பேச்சு வார்த்தைகள் இடம்பெறவுள்ளன.

அத்துடன்,கடந்த பொதுத்தேர் தலுக்கு முன்னர் நான் 6வருடங் களாக ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்துள்ளேன்.ஆயினும் தேர்தலுக் குச் சில மாதம் முன்பு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இணைந்து கம் பஹா மாவட்டத்தில் போட்டி யிட்டு ரணிலுக்கு அடுத்தபடியான மிகக் கூடிய விருப்பு வாக்குகள் பெற்றேன். இதற்கு மக்கள் என்மீது கொண்ட நம்பிக்கையும் ஆதரவும்தான் காரணம் என்று குறிப்பிட்டார்.

அதே சமயம்,நாட்டின் பிரதம ராக ரணில் இருந்தாலும் நாட் டையோ நாட்டு மக்களையோ பற்



றிக் கவலைப்படாமல் அதிக நாட் களை வெளிநாடுகளுக்கு சுற்றுலா செய்வதிலேயே கழித்து வருகி றார். மக்களைப் பற்றிக் அவர் கவலைப் படுவதே இல்லை. மக்கள் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினை யைச் சமாளிக்க முடியாமல் திண்டாடும் போது அரசாங்க நிதியைப் பயன்படுத்தி பிரதமர் ரணில் வெளி நாடுகளுக்கு விஜயம் மேற்கொள்வது எந்த வகையில் நியாயம் என வினாவெழுப்பியுள்ளார். (உ-18)

# குற்றச்செயல்களை ஒழிக்கும் விடயத்தில் பொதுமக்களின் ஒத்துழைப்புக்கு பொலிஸ்மா அதிபர் பாராட்டு

(கொழும்பு)

பொலிஸ்காரர் எல்லோரும் கடமையுணர்வுவோடு செயற்பட்டு வருவதால் எமது பொலிஸ் சேவை இப்போது பலமடங்கு வளர்ச்சியடைந் துள்ளது.இதனால் நாட்டின் பாதுகாப்பு நிலைமை ஸ்திரமாகவே உள்ளது.

தென்னிலங்கையில் பெருகி வரும குற்றச்செயல்களைக் கட்டுப்படுத் துவதில்பொலிஸாருடன் இணைந்து பொது மக்கள் பலரும் ஒத்துழைப்பு வழங்கி வருவது சிறப்பான விடயமாகும்.

இவ்வாறு நேற்று முன்தினம் உள்துறை அமைச்சு அலுவலகத் தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றும்போது பொலிஸ்மா அதிபர் ரீ.ஈ. ஆனந்தராசா தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும உரையாற்று கையில்,

கடந்த 3வார காலத்திற்குள் மாத்திரம் தென்னிலங்கையில் 53 படு கொலைகள் இடம்பெற்றுள்ளன. ஆயி னும் பொதுமக்கள் ஒத்துழைப் புடன் பொலிஸாரின் தீவிரத் தேடு தல் நடவடிக்கையில் பல்வேறு குற் றச் செயல்களில் ஈடுபட்ட 232 சந்தேக நபர்கள் பொலிஸாரின் வலையில் சிக்கி கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன்,கடந்த 6மாத காலமாக பொலிஸார் மேற்கொண்ட தீவிர தேடுதல் நடவடிக்கைகளின் பலனாக இதுவரை 136 துப்பாக்கிகளும்,132 கைக்குண்டுகளும்,12ஆயிரம் துப்பாக்கி ரவைகளும் மீட்கப்பட்டுள்ளதுடன், பல்வேறுகுற்றச் செயல்களுக்காகப் பயன்படுத்திய வாகனங்கள் உட்பட மற்றும பலபொருட்களும பொலிஸா ரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்றார்.

அதே சமயம் பொலிஸார் பற்றிய தப்பான செய்திகளையும் உண்மை யற்ற தகவல்களையும் சில ஊடகங் கள் உண்மைக்குப் புறம்பான வகை யில் வெளியிட்டு வருகின்றன. மக கள் மத்தியில் பொலிஸார் குறித்த தப் பபிப்பிராயம் நிலவுவதற்கு சில ஊடகங்கள் வெளியிடும் செய்திகளே காரணமாக அமைகின்றன. இவ்வா றான ஊடகங்களின் செயற்படுகள் தவிர்க்கப்படவேண்டும் என பொலிஸ மா அதிர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேற்படி பத்திரிகையாளர் மாநாட் டில் உள்துறை அமைச்சின் செயலாளா எம்.என்.ஜுனைற் மேற்குப் பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் பிரதி பொலிஸ் மா அதிபர்கள் மற்றும் பல முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டனர். (உ-18)


## பிரதேச செய்தியாளர் பதவி வெற்றிடம்

பின்வரும் இடங்களில் பிரதேச செய்தியாளர்களாக கடமையாற்று வதற்கான விண்ணப்பம் ஆண்களிடம் இருந்து கோரப்படுகின்றது.

- ★நயினாதீவு
- ★சரசாலை
- ★கொய்யாத்தோட்டம்
- ★கல்வியங்காடு
- ★மண்கும்பான்
- ★ஓட்டுமடம்
- ★வல்வெட்டித்துறை
- ★புன்னாலைக்கட்டுவன்
- ★குப்பிளான்

இப்பதவிக்கு க.பொ.த சாதாரண தரத்தில் ஆறு பாடங்களில் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிப்பவர்கள் தங்களது முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி, கல்வித் தகைமை, தொழில், தொழில் புரியும் இடம் என்பன உள்ளடங்கியதாக தயாரிக்கப் பட்ட விண்ணப்பங்களை;

பிரதம ஆசிரியர்,
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு இம் மாதம்20-ந் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும்.

குறிப்பு : வயதெல்லை வரையறுக்கப்படவில்லை.

வலம்புரி ஆளணி முகாமையாளர்

# ஈராக்கின் மீள் கட்டுமானத்திற்கு பாரிய அளவில் அமெரிக்க நிதி உதவிகள்

## பிற நாடுகளின் உதவியும் எதிர்பார்க்கப்படுகிறது

(வாஷிங்டன்)

ஈராக்கை மீளக் கட்டியெழுப்பும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா மேலும் நிதியை ஒதுக்கத் திட்டமிட்டுள்ளது.

ஏற்கனவே ஈராக்கின் அபிவிருத்திக்கு அமெரிக்கா 84 மில்லியன் டொலர்களை ஒதுக்கத் திட்டமிட்டிருந்தது.

எனினும், இந்தத் தொகையை மேலும் அதிகரிக்க அமெக்கா முடிவு செய்துள்ளது.

இதேவேளை, ஈராக்கின் எண்ணை உற்பத்தி மூலம் அடுத்த வருடம் 12 மில்லியனையும், அதற்கு அடுத்த 2 வருடங்களுக்கு 20 மில்லியனையும் வருமானமாகப் பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், ஈராக்கின் அபிவிருத்தித்திட்டங்களுக்கு உலக நாடுகளின் பங்களிப்பையும் அமெரிக்கா எதிர்பார்த்துள்ளது.

(பி-9)

## இஸ்ரேலியப் பிரதமரின் வரலாற்று முக்கியத்துவமான இந்திய விஜயம்

உலகில் முக்கியமான நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்கிறது என்றும், இந்தியாவுடன் உறவுகளை ஏற்படுத்தி வலுப்படுத்திக் கொள்வதில் இஸ்ரேல் அக்கறை காட்டுகின்றது என்றும் இஸ்ரேலியப் பிரதமமந்திரி ஏரியல் ஷெரோன் கூறியிருக்கின்றார்.

குடியரசுத் தலைவர் மாளிகையின் முன்பகுதியில் நேற்றுக் காலை நடந்த விமர்சையான வரவேற்புக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார். பல துறைகளில் இந்தியாவும் இஸ்ரேலும் இணைந்து உழைக்க முடியும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இஸ்ரேலியப் பிரதம மந்திரியின் இந்தியப் பயணம் வரலாற்றுச் சிறப்பு மிக்கது என்று பிரதம மந்திரி வாஜ்பாய் கூறியுள்ளார். இந்தப் பயணம் இரு நாடுகளின் நட்புறவை மேலும் வலுப்படுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டார். (பி9)

## அமெரிக்காவுக்கு எதிராக எல்லா இடங்களிலும் தாக்குல் நடத்தப்படுமாம்

### அல்கெய்டா அறிவிப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்காவுக்கு எதிரான தாக்குதல்களை சகல இடங்களிலும் மேற்கொள்ளப் போவதாக அல்கெய்டா இயக்கம் எச்சரித்துள்ளது.

அல்கெய்டா இயக்கத்தின் பேச்சாளர் என நம்பப்படும் நபர் அல்அரேபியத் தொலைக்காட்சிச் சேவைக்கு வழங்கிய ஒலிநாடாவிலேயே இந்தக் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி அமெரிக்காவில் இடம்பெற்ற தாக்குதலை மறக்கும் அளவிலான பாரியதாக்குதல்கள் பலவற்றை உள்நாட்டிலும்,வெளிநாடுகளிலும் அமெரிக்கர்கள் எதிர்நோக்க வேண்டி வருமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஒலிநாடா செப்ரெம்பர் 3ஆம திகதியிடப்பட்டு வெளியிடப்பட்டிருந்தது.

இதேவேளை,அண்மையில் ஈராக்கின் புனிதநகரான நஜாப்பில் இடம்பெற்ற கார்க்குண்டுத் தாக்குதலுக்கும் தமக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என அந்த அமைப்பு கூறியுள்ளது.

இந்தக் குண்டு வெடிப்பு சம்பவத்தில் ஷியா முஸ்லிம் தலைவர் முகமட் பகீர்அல்ஹஹீம் உட்பட 83பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

செப்ரெம்பர் 11ஆம் திகதி தாக்குதல் இடம்பெற்று 2ஆண்டுகள் நிறைவு பெற இன்னும் சில தினங்களே உள்ளன.

பலஸ்தீனத்தின் அடுத்த பிரதமர் யாராக இருந்தாலும் அவர் பயங்கரவாதத்துக்கு எதிராக போராடுபவராக இருக்க வேண்டும் என அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் தெரிவித்துள்ளார்.

பலஸ்தீன பாதுகாப்பு படைகள், மற்றும் அரசியல் சக்திகள் என்பவற்றைக் கட்டுப்படுத்தக் கூடிய ஆளுமை இருக்கவேண்டுமென அவர் மேலும் கூறியுள்ளார்.

பலஸ்தீன தீவிரவாத இயக்கங்களின் சொத்துக்களை முடக்க ஐரோப்பிய யூனியன் எடுத்த தீர்மானத்தையும் அவர் பாராட்டியுள்ளார்.

இதேவேளை பலஸ்தீனப் பிரதமர் மொஹமட் அப்பாஸ் தமது பதவியை இராஜினாமாச் செய்ய எடுதத தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்ய வாய்ப்புக்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(பி-9)

## ரூ.10 கோடிமதிப்பான போதைப்பொருள் பிடிபட்டது

(இஸ்லாமாபாத்)

இஸ்லாமாபாத் சர்வதேச விமான நிலையத்தில் இளைஞர் ஒருவரிடம் இருந்து ரூ. 10 கோடி மதிப்புக் கொண்ட ஹெரோயின் போதை மருந்தை சுங்க அதிகாரிகள் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கைது செய்தனர். (பி)

## முலாயம்சிங் அமோக வெற்றி

(லக்னௌ)

உத்தரப்பிரதேச முதல்வர் முலாயம் சிங்யாதவ், நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்றார்.

உத்தரப்பிரதேச சட்டப்பேரவையில் மொத்தம் 401 எம்.எல்.ஏ.க்கள் உள்ளனர். திங்கட்கிழமை நடந்த சட்டப்பேரவைக் கூட்டத்தில் 398 பேர் பங்கேற்றனர். அவர்களில் 244 பேர் முலாயம் சிங் யாதவுக்கு ஆதரவாக வாக்களித்தனர். 154 பேர் எதிர்த்து வாக்களித்தனர். (பி)

## வீரப்பன் கூட்டாளிகள் இருவர் கைது

(தர்மபுரி)

தர்மபுரி மாவட்டம் அஞ்செட்டி அருகே வீரப்பன் கூட்டாளிகள் இருவர் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டனர்.

சந்தனக் கடத்தல் வீரப்பனைத் தேடும் பணியில் தமிழக, கர்நாடக அதிரடிப்படையினரும் பொலிசாரும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

கட்டுணபள்ளம் வனப்பகுதியில் மறைந்திருந்த வீரப்பன் கூட்டாளிகள் மாதன் என்கிற மாதையன் (35), முனியன் (52) ஆகியோரை அதிரடிப்படையினர் திங்கட்கிழமை கைது செய்தனர். (பி9)

## மத்திய அமைச்சரவையில் மீண்டும் செஞ்சி இராமச்சந்திரன்

(புதுடில்லி)

ம.தி.முகவைச் சேர்ந்த செஞ்சி இராமச்சந்திரன், திரிணமூல் காங்கிரஸ் தலைவர் மமதா பானர்ஜி ஆகியோர் மத்திய அமைச்சரவையில் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

திங்கட்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில், குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் அவர்களுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

பிரதமர் வாஜ்பாய் துணைப் பிரதமர் அத்வானி உட்பட மத்திய அமைச்சர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் இதில் கலந்துகொண்டனர்.

செஞ்சி இராமச்சந்திரன், நிதித்துறை இணை அமைச்சராகப் பதவி வகித்துவந்தபோது அவரது தனி உதவியாளர் பாபு லஞ்சம் பெற்றதாக சிபிஐ பொலிசாரால் கடந்த மே மாதம் 22-ம் திகதி கைது செய்யப்பட்டார். இதையடுத்து, பிரதமர் உத்தரவின்படி மே 23-ம் திகதி தனது பதவியை இராஜினாமா செய்தார் செஞ்சி இராமச்சந்திரன்.

அவர் மீது குற்றச்சாட்டு இல்லாத நிலையில், தற்போது மீண்டும் மத்திய அமைச்சரவையில் இணை அமைச்சராகச் சேர்க்கப்பட்டுள்ளார். ஆனால், அவருக்கு மீண்டும் நிதித்துறை ஒதுக்கப்படவில்லை. வாஜபாய் அரசு ஆட்சிக்கு வந்தபோது, 1999 முதல் டிசம்பர் 2000 வரை வகித்து வந்த ஜவுளித்துறை அவருக்கு மீண்டும் ஒதுக்கப்பட்டுள்ளது. (பி)



மத்திய இணை அமைச்சராக திங்கட்கிழமை பதவியேற்ற செஞ்சி இராமச்சந்திரன், பிரதமர் வாஜபாயின் காலைத் தொட்டு ஆசி பெற்றார். துணைப் பிரதமர் அத்வானி வாழ்த்துத் தெரிவித்தார்.

## சதாமின் சொந்த ஊரில் தேடுதல்; 4 பேர் கைது

(திக்ரித்)

ஈராக்கில் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனின் சொந்த ஊரான திக்ரித்தில் அமெரிக்க ராணுவ வீரர்கள் 100 பேர் திங்கட்கிழமை அதிகாலையில் திடீர் சோதனை நடத்தினர்.

அமெரிக்கப் படையினர் மீது தாக்குதல் நடத்துவதற்கு நிதி உதவி அளிப்பவர்கள். அத் தாக்குதலை ஒருங்கிணைத்து நடத்தக் காரணமாக இருப்பவர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ள 4 பேரை அவர்கள் கைது செய்தனர்.

திக்ரித்தில் உள்ள சதாம் ஆதரவாளர்களின் வீடுகள் அனைத்திலும் ஒரே நேரத்தில் இச் சோதனை நடத்தப்பட்டது வீடுகளில் தூங்கிக்கொண்டு இருந்தபோது அவர்களை அமெரிக்கப் படை கைது செய்தது.

தேடப்பட்ட இருவர் பிடிபடவில்லை; யு.எஸ். படைகள் மீது எறிகுண்டுத் தாக்குதல்களை நடத்திய சதாம் தற்கொலைப் படையைச் சேர்ந்தவர்கள் அவர்கள் என்று அமெரிக்க ராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

(பி-9)

## தமிழக அரசின் தடையை மீறி கோயில் வாயிலில் கடா வெட்டி ஊர்வலம்

(திருச்சி)

கோயில்களில் விலங்குகளைப் பலியிடுவதைத் தடை செய்து தமிழக அரசு பிறப்பித்துள்ள ஆணைக்கு எதிர்ப்புத் தெரிவித்துத் திருச்சியில் மக்கள் கலை இலக்கியக் கழகத்தினர் திங்கட்கிழமை கோயிலில் கடா வெட்டி ஊர்வலம் நடத்தினர்.

இச்சட்டத்தை எதிர்ப்பதற்காக உறையூர் குழுமாயி அம்மன் கோயிலுக்குச் சொந்தமான புத்தூர் மந்தையில் காலையில் கடா வெட்டப் போவதாக ஏற்கெனவே ம.க.இ.க.வினர் அறிவித்திருந்தனர்.

இதைத் தொடர்ந்து இந்தப் பகுதி முழுவதும் முன்னதாகவே காவல்துறையினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

இதனிடையே, ம.க.இ.க. சார்பு ஓட்டோ சங்க மாவட்டச் செயலர் செல்வராஜ் தலைமையில் ஒரு கிடாவுடன் ம.க.இ.க.வினர் ஊர்வலமாக வந்தனர். காவல் துறையினர் அவர்களைத் தடுத்து, 3 பெண்கள் உட்பட 9 பேரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சிறிது நேரத்தில், பகல் 11.15 மணியளவில் மாநகரில் பரபரப்பு மிகுந்த பெரிய கடை வீதியில் கோட்டை சமஸ்பிரான் தெரு ஸ்ரீசப்பாணி சுவாமி கோயில் முன் ஓட்டோவில் ஆட்டுக் கடாவுடன் சில ம.க.இ.க.வினர் வந்திறங்கினர்.

வந்தவுடனேயே கோயில் வாசலில் கடாவை வெட்டி ஒருவர் தோளில் தூக்கிப் போட்டுக் கொள்ள, மற்றொருவர் அவரைத் தூக்கித் தோளில் வைத்துக் கொள்ள, அந்த இளைஞர்கள் ஊர்வலமாக மலைக்கோட்டையை நோக்கி நடக்கத் தொடங்கினர்.

மிகவும் சுறுசுறுப்பான நேரமாதலால் பெரிய கடை வீதி முழுவதும் மக்கள் திகைத்துப் போய் வேடிக்கை பார்த்தனர்.

இந்த வீதியையொட்டியே கோட்டை காவல்நிலையம் இருக்கிறது ஒருவழிப் பாதையான இந்த வீதியில் வழியெங்கும் காவலர்களும் பணியில் இருந்தனர்.

எனினும், தடுத்து நிறுத்தப்படாத நிலையில் சுமார் 1 கி.மீ. தொலைவுக்கும் கூடுதலாகக் கடை வீதியில் நடந்து சென்ற இவர்களை, அருள்மிகு தாயுமான சுவாமி திருக்கோயிலுக்குச் செல்லும் மலைக்கோட்டை வாசலில்தான் காவல்துறையினரால் மறித்துக் கைது செய்ய முடிந்தது. இவர்கள் மீது வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (பி)



தமிழக அரசின் தடை ஆணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கோயில் வாயிலில் கடா வெட்டி ஊர்வலம்.

# தரம்-5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

வினா இல : 31

**கூடிய புள்ளி ஒழுங்கில் மாணவர் பெயர் விபரம் வருமாறு:**

01: ப. சங்கீர்த்தனா- சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
02. பா. கிறிஸ்ரின்வேணி- உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை
03. க. கோபிகா- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
04. இ. சுதர்சினி- வரணி மகாவித்தியாலயம்
05. செ. சிவதர்சினி- சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
06. கு. பிரசாந்- யா/மத்திய கல்லூரி
07. கி. நிதர்சன்- வரணி மகாவித்தியாலயம்
08. சி. மிரோஜினி- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
09. பா. கோகிலன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
10. வே. நிரூஜன்- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
11. சு. அருளினி- உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
12. சா. ஆதவன்- நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை
13. ம. சிவறோஷன்- வட்டு. யாழ்ப்பாணக் .கல்லூரி
14. ச. அகலியா- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
15. த. தனுஷ்யா- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
16. சு. ரேசிஜா- சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
17. அ. அகல்யா- சுன்னாகம் றோ.க.த.க. பாடசாலை
18. த. விஜதன்- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
19. ச. சுவீபன்- சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
20. த. சுவேதிகா- ஆழியவளை மகாவித்தியாலயம்
21. இ. சௌமியா- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
22. ச. நியோசன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
23. செ. றகீம்டிநெல்சன்- உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
24. ந. சரண்யா- மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை
25. பி. நந்தினி- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
26. த. தனுசியா- வல்வெட்டி விநாயகர் மகாவித்தியாலயம்
27. ம. சிவகௌரி- பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி
28. இ. சிந்துஜா- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
29. பா. சந்திரா- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
30. ச. ஜெயபாரதி- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
31. அ. சுகிர்தன்- யா/மத்திய கல்லூரி
32. செ. நிஷாந்- இணுவில் மத்திய கல்லூரி
33. த. சரண்யா- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
34. செ. கலிஸ்ரா- நவாலி சென்பீற்றேஸ் றோ.க.த.க. பாடசாலை
35. அ. பிறிற்றோ- எழுவைதீவு புனித மரியாள் மகளிர் வித்தியாலயம்
36. போ. டினோஜன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
37. சி. துளசிகா- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
38. து. வைஷ்ணவி- ஆனைக்கோட்டை அ.மி.த.க.பாடசாலை
39. செ. திருக்குமரன்- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
40. பா. மிரோஜா- கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்
41. கு. கோபிராம்- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
42. ச. ஷண்மதுரன்- சுழிபுரம்- ஐக்கியசங்க சைவ வித்தியாசாலை
43. இ. வித்தியாகரன்- கரவெட்டி இராமுப்பிள்ளை வித்தியாலயம்
44. செ. ஜெனகன்- கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயம்
45. கு. சிரஞ்ஷீவன்- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
46. யோ. ஆரணி- தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி
47. ஸ்ரீ. நீரஜா- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
48. கெ. சுபாகரன்- வதிரி திருஇருதயக் கல்லூரி
49. ஞா. தாரணி- யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
50. சி. கெஜரூபன்- தாவடி இ.த.க.பாடசாலை
51. சி. ஜோதிகா- யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
52. பே. சைலே- யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்
53. இ. அனோஜிதா- உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை
54. ஜெ. கீர்த்திகா- நல்லூர் ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்
55. ம. நிருபன்- வல்வை சிவ குரு வித்தியாசாலை
56. செ. நிஷாந்- இணுவில் மத்திய கல்லூரி
57. ம. இந்துஷா- மல்லாகம் கனிஷ்ட மத்திய மகாவித்தியாலயம்
58. செ. திலட்ஷன்- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
59. வே. சரண்யா- யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
60. பா. பகீரதன்- பாலசுப்பிரமணிய வித்தியாலயம்.
61. எஸ். கலைச்செல்வன்- பாலசுப்பிரமணிய வித்தியாலயம்
62. பி. நிரோஷன்- மானிப்பாய் விவேகானந்த வித்தியாலயம்
63. க. தனுசீலன்- மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்.
64. கோ. பிரதீபா- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
65. கு. மோறஞ்சிதா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
66. சு. அஜித்தா- ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்
67. நா. சிவனியா- நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை
68. இ. அகிலா- வதிரி திருஇருதயக் கல்லூரி
69. சி. துவாரகன்- கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயம்
70. ம. கஸ்தூரி- அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
71. வி. நிரோஜன்- உடுவில் தந்தை செல்வா தொ.நு பள்ளி
72. யோ. விதுஷ்ஷன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
73. மோ. சித்திராங்கன்- உடுவில் தந்தை செல்வா தொ.நு பள்ளி
74. பு. தர்ஜனி- சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
75. சா. மதுறமி- யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
76. செ. சுவேதரன்- ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்
77. ஜெ. சயந்தன்- வண்ணை நாவலர் மகாவித்தியாலயம்
78. த. தேவப்பிரியன்- யா/புனிதஜோன் பொஸ்கோ வித்தியாலயம்
79. ர. சாம்பவி- சுன்னாகம் இராமநாதன் கல்லூரி
80. இ. ஸ்ராலினி- யா/ இந்து ஆரம்பப் பாடசாலை
81. ச. றஜீதா- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
82. பு. பபிகரன்- அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்
83. கி.தனுசா- அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்
84. ப. குகதர்சினி- அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை
85. ம. கஜீபா- கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்
86. லி. கரூஷன்- இணுவில் மத்திய கல்லூரி
87. செ. ராஜ்குமரன்- சங்கானை ஸ்தான அ.மி.த.க.பாடசாலை
88. சி. சஞ்சிகா- யா/பாலசுப்பிரமணிய வித்தியாலயம்
89. ம. கல்பனா- நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை
90. இ. நிவேதா- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
91. க. வாணுஜா- சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
92. க. செல்வி- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
93. மு. பிருந்தா- நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை
94. ப. தர்மிளா- சரவணை நாகேஸ்வரி மகாவித்தியாலயம்
95. த. யதுர்ஷன்- யா/பெரிய புலம் மகாவித்தியாலயம்
96. சீ. சுஜீபனா- அச்சுவேலி மத்திய கல்லூரி
97. க. சாமளா- மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்
98. செ. சாருகா- மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்
99. த. தபோஜனன்- இணுவில் மத்திய கல்லூரி
100. பு. சன்ஜீவன்- ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்
101. ச. நந்துஜா- யா/பெரிய புலம் மகாவித்தியாலயம்
102. சோ. தனஞ்சயன்- தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை
103. சி. அருண்குமார்- வதிரி திருஇருதயக் கல்லூரி
104. சி. நிலக்ஷன்- மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை
105. ர. வினோஜினி- கொட்டடி நமசிவாய வித்தியாலயம்
106. க. கலீபன்- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
107. செ. அருள்ராஜ்- மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயம்
108. ர. மயூரி- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
109. கு. சஞ்சிகா- கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி
110. த. பிரியந்தி- கரந்தன் மாணிக்கவாசக வித்தியாலயம்
111. த. காந்தா- வேலணை நடராஜ வித்தியாலயம்
112. கு. விஜிதா- வல்வை றோ.க.த.க பாடசாலை
113. செ. ஆருணன்- மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்
114. வி. பிறேமிலா- தேவரையாளி இந்துக் கல்லூரி
115. தி. ஜெனத்குமரன்- கோப்பாய் றோ.க.த.க பாடசால்லை
116. க. விபிஜா- ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலை
117. ச. அருண்- இணுவில் மத்திய கல்லூரி
118. சி. மனோஜிதன்- கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
119. ம. மதுசன்- வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி
120. தி. உமாசங்கரி- சுன்னாகம் இராமநாதன் கல்லூரி
121. க. அகிலன் -வரணி மகாவித்தியாலயம்
122. ச. திவிஜன்- உடுவில் மகளிர் கல்லூரி
123. அ. எட்வின்ஜோய்- யா/சென்ஜோன்ஸ் கல்லூரி
124. சி. ஜஜிதா- மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்
125. யோ. கௌசல்லியா- கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம
126. சி. கிஸோக்குமார்- உடுப்பிட்டி அ.மி.கல்லூரி
127. திபாகரன்- ஆனைபந்தி மெ.மி.வித்தியாலயம்
128. ச. செரினா- சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
129. க். சிந்துஜன்- துன்னாலை மெ.மி.த.க.பாடசாலை
130. செ. நிதர்ஷன் உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
131. தி. தசேந்திரன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
132. சி. டினோஜன்- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
133. ஜெ. லக்ஷி- யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
134. க. யசோதரன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
135. ம. கலைமதி- கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயம்
136. தி. அருந்தஷா- கரணவாய் விக்னேஸ்வராக் கல்லூரி
137. பே. கலையரசன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
138. வி. விதுர்சனா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
139 ப. லக்சியா- துன்னாலை மெ.மி.த.க. பாடசாலை
140. இ. இராயபிரவிந்தன்- மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலை
141. மா. சர்மிலன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
142. சி. கனிஷ்ஸா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
143. இ. டண்சிகா- ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலை
144. பொ. கோகிலன்- மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை
145. கு. ஜெய்சினி- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
146. யோ. துஷிகன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
147. இ. கஜன்ராஜ்- பூம்புகார் அ.த.க.பாடசாலை
148. ந. துஷிகா- கரணவாய் விக்னேஸ்வராக் கல்லூரி
149. மோ. சோதீபன்- மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம்
150. து. பிரபானந்தி- உசன் இராம்நாதன் மகாவித்தியாலயம்
151. கு. சர்மிளா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
152. சா. விஜிகலா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
153. மு. நிரோஜா- அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
154. ர. யதுர்சன்- யா/இந்து ஆரம்பப் பாடசாலை
155. அ. ராஜ்ஹரன்- கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி
156. ச. சரணிகா- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
157. ஆ. நிரோஜினி- நவாலி சென்பீற்றேஸ் றோ.க.த.க. பாடசாலை
158. சி. ஜெயறஞ்சினி- சுழிபுரம் மத்தி
159. செ. ஜனகன்- கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயம்
160. அ. துவாரகன்- வரணி மகாவித்தியாலயம்
161. இ. இராஜப்பிரசாந்தன்- மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலை
162. ம. சரண்யா- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
163. ச. லசிகலா- யா/திருக்குடும்பக் கன்னியர் மடம் மகாவித்தியாலயம்
164. அ. விமலினி- கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்
165. வி. துஷ்யந்தன்- நயினை நாகபூசணி வித்தியாலயம்
166. ச. சஞ்சயன்- மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயம்
167. த. தர்சாயினி- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
168. ப. துஷாரா- வேலணை நடராஜ வித்தியாலயம்
169. இ. சகிலா- அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
170. பா. சிவனருட் செல்வசர்மா- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
171. ஜி. அபர்ணா- கொட்டடி நமசிவாய வித்தியாலயம்
172. சி. காயத்திரி- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
173. த. தர்விகா- பண்டத்தரிப்பு உயர்தரப் பாடசாலை
174. செ. வினோத- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
175. வே. பிரசன்ஜா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
176. த. அனுசா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
177. நா. திருவதனன்- உடுவில் மகளிர் கல்லூரி
178. எஸ். தர்சனா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
179. நே. லாவன்ஜன்- தாவடி இ.த.க.பாடசாலை
180. த. நிறோஜினி- கொட்டடி நமசிவாய வித்தியாலயம்
181. ம. விஷ்ணுகரன்- ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலை
182. தே. வினோஜ்காந்- யா/ மத்திய கல்லூரி
183. பா. அனுசியா- கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயம்
184. செ. துவாரகன்-நல்லூர் ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயம்
185. செ. கலையரசி- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
186. மி. வினுஷா- வேலணை நடராஜ வித்தியாலயம்
187. ம. ஜனனி- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
188. த. ரூசிகா- இணுவில் மத்திய கல்லூரி
189. ப. சுகீர்த்தனா- தேவரையாளி இந்துக் கல்லூரி
190. சி. சஸ்மிதா- ஆனைக்கோட்டை அ.மி.த.க.பாடசாலை
191. ச. அனுஷா- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
192. பா. லோஜன்- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
193. நா. தேனுஜா- நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை
194. இ. ஸ்ரீவதனா- வேலணை நடராஜ வித்தியாலயம்
195. சி. சுஜீபா- வேலணை நடராஜ வித்தியாலயம்
196. ந. நக்கீரன்- சுன்னாகம் இரமநாதன் கல்லூரி
197. ஞா. நிவேதிகா- வேலணை நடராஜவித்தியாலயம்
198. க. அனுசியன்- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
199. செ. தீபனா- வேலணை நடராஜ வித்தியாலயம்
200. ஜெ. கீர்த்தனா- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
201. த. சுகன்யா- நல்லூர் ஸ்ரீவிக்னோஸ்வரா வித்தியாலயம்
202. வி. அமலா- நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்
203. யே நிதர்சகுமார்- நல்லூர் ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்
204. ப. சிவருக்ஷி- யா/ இந்து ஆரம்பப் பாடசாலை
205. தி. கிரிசாந்- வேலணை நடராஜ வித்தியாலயம்
206. அ. கனிஷ்ரா- உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை
207. கு. விஜிதா- உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை
208. சி. கௌதமி- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
209. ம. அபிவர்ஷினி- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
210. ஆ. கஜீபன்- யா/மத்திய கல்லூரி
211. வ. கீர்த்தனா- ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம்
212. ஜெ. நிரோஜனா- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
213. ச. லிகிர்தா- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
214. இ. கிரிசாந்- யா/மத்திய கல்லூரி
215. கா. கஜீபன்- நல்லூர் ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயம்

## வினாத்தாள் 31-ன் விடைகள்

01 முகமட்
02. கணேசன்
03. சிசிலியா
04. அருந்ததி
05. சுமணதாச
06. (3) 07. (2) 08. (1)
09. (3) 10. (1) 11. (2)
12. (1) 13. (4) 14. (2)
15. (4) 16. 6 17. 7
18. 1 19. (2) 20. (3)
21. - 22. (4) 23. (3)
24. (4)
25. 071-51206
26. 01-32567
27. தீயணைப்பு
28. 01-72177
29. 071-33333
30. O 31. N 32. N
33. N 34. O
35. 2003ம் ஆண்டு
36. May Day
37. உருளைக்கிழங்கு
38. மாம்பழம்,பப்பாசிப்பழம்
39. பயிற்றங்காய்
40.உணவைசமிபாடடையச்செய்ய

## விவசாயிகள் வாட்டம்

(மருதங்கேணி)

காலபோக நெல்லைச் சந்தைப் படுத்த முடியாத நிலையில் இரணை மடுக் குளப்பகுதி விவசாயிகள் பொருளாதார ரீதியில்பெரிதும் பாதிக் கப்பட்டுள்ளனர்.

இதனால்,தொடர்ந்தும நெற்செய் கையில் ஈடுபட முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அவர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-35)

## மக்கள் மனக்கவலை

(யாழ்ப்பாணம்)

நாயினாதீவுக் கடற்பிராந்தியத் தில் பிடிக்கப்படும் கடல் உணவுகள் யாழ்ப்பாணம் மற்றும் வேலணைப் பகுதிகளில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

அதிக இலாப மீட்டும் நோக்கில் இவ்வாறு கடல் உணவுகள் விற் பனை செய்யப்படுவதால் தமக்கு தரமான கடல் உணவு வகைகள் கிடைப்பதில்லை என நயினாதீவுப் பகுதி மககள் மனக்கவலை தெரி வித்துள்ளனர். (உ-18)

## முழுநிலா கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரம்ம குமாரிகள் சங்கம், மாதாந்தம் நடாத்திவரும் முழுநிலா துறைசார் கருத்தரங்கு இன்று காலை 9.30 மணிக்கு நாவலர் கலாசார மண்ட பத்தில் இடம்பெறவுள்ளது.

வாழ்க்கையில் ஆன்மீகத்தின் பங்களிப்பு என்ற கருப்பொருளில் பிரம்ம குமாரர் ரங்கநாதன் தலை மையில் இடம்பெறவுள்ள இந்நிகழ் வில்,பொறியியலாளர்களான வேத நாயகம் ரகுநாதன், சி. தயாபரன் ஆகியோர் சிறப்புச் சொற் பொழி வுகளை ஆற்றவுள்ளனர். (உ-18)

## மலசலகூடப் பொருட்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

மீசாலை கிழக்கில் உள்ள வறிய மக்களுக்கு இந்து கலாசார அமைச் சினால் இன்று புதன்கிழமை காலை 8.00 மணிக்கு மீசாலை காட்டு வளவு நெல்லியடி கந்தசுவாமி ஆலயத் தில் வைத்து மலசலகூடம் அமைப் பதற்குத் தேவையான உதவு பொருட் கள் வழங்கப்படவுள்ளன.

எனவே மேற்படி ஆலயத்தின் ஊடாக இதற்கான பதிவை மேற் கொண்டவர்கள், இன்று குறிப்பிட்ட நேரத்திற்கு வந்து பொருட்களைப் பெற்றுக்கொள்ளுமாறு மேற்படி ஆலய பரிபாலன சபையினர் கேட் டுள்ளனர். (தி-10)

## பொலிஸாரால் கைது

(கொழும்பு)

கொள்ளை,கொலை மற்றும் பாலி யல் குற்றச்சாட்டுக்களுடன் தொடர் புடைய கோஷ்டி ஒன்றை வென்னப்புவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

6 பேர்கொண்ட இக்கோஷ்டியை மாதம்பை என்னும் இடத்தில் வைத் துக் கைது செய்யும் போது அவர் களிடம் இருந்த 2 கைக்குண்டுகள், துப்பாக்கிகள் அவற்றுக்குரிய ரவை கள், தங்க ஆபரணங்கள் என்பன வும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர்கள் அனைவரும் மேலதிக விசாரணைக்காக வென்னப்புவ பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (தி)

# தரம்-5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

வினா இல. : 33 ஆக்கம்: சுந்தர் வெளியீடு

**எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.**

★ கீழே உள்ள அட்டவணையானது ஒரு நிறுவனத்தின் முதலாளி அங்கு பணிபுரியும் ஊழியர்கள் வேலை செய்யும் வேளைகள் தொடர்பானதாகும்.

★ ஒரு நாளில் காலை வேளையில் இருவரும், மாலையில் ஒருவருமாக மொத்தம் 3 பேர் வேலை செய்வார்கள். (முதலாளி உட்பட)

★ இவர்களின் பெயர்கள் A, B, C, D, E, F இனால் குறிக்கப்படுகின்றன.

★ இதனடிப்படையில் 1-10 வரையிலான வினாக்களுககு விடை தருக.

| நாட்கள் | காலை வேளை | மாலை வேளை |
|---|---|---|
| திங்கள் | B,D | C |
| செவ்வாய் | C,D | A |
| புதன் | B,E | A |
| வியாழன் | A,D | C |
| வெள்ளி | D,E | C |
| சனி | B,D | A |
| ஞாயிறு | E,A | A |

01) நிறுவனத்தின் முதலாளி இரண்டு நாட்கள் மட்டும் வேலை செய்வதில்லை. அதில் ஒரு நாள் ஞாயிறு எனில், இந்நிறுவனத்தின் முதலாளி யார்?

.................................................................................................

★ முதலாளியின் மகனே அவர் வராத நாளில் நிறுவனத்தைக் கவனித்துக்கொள்பவர் எனில்,

02) அவருடைய மகனாக இருக்கக்கூடியவர்கள் யார்/யாவர்?

.................................................................................................

03) அவர் மாலை நேர கடமையினையும் செய்யும் ஒருவர் எனில், முதலாளியின் மகன் யார்?

.................................................................................................

04) முதலாளியை விடுத்து பகல் நேரத்தில் மட்டும் வேலை செய்பவர்கள் யார்/யாவர்? அவர்கள் வேலை செய்யும் நாட்கள் எத்தனை?

........................................................ ..........................................

05) இந்நிறுவனத்தில் F என்னும் ஒருவர் புதிதாகப் பணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டார். அவருக்கு 2 நாட்களுக்கே கடமை வழங்கப்பட்டது. அவருடைய கடமை நாட்கள் செவ்வாய் - பகல் வேளையும், சனி மாலை நேரமும் எனில் யாருடைய கடமை நேரங்கள் F இற்கு வழங்கப்பட்டன?

செவ்வாய் ................................... சனி...................................

★ தொழிலாளி ஒருவருக்கு ஒருநேரக் கூலியாக ரூபா 150.00 வழங்கப்படின்

06) B பெறும் சம்பளம் வாரமுடிவில் யாது (F வர முன்னர்)

.................................................................................................

07) A பெறும் சம்பளம வார முடிவில் யாது (F வர முன்னர)

.................................................................................................

08) வாரந்தோறும் சம சம்பளத்தைப் பெறுபவர்கள் யாவர்?

.................................................................................................


09) இந்நிறுவனத்தில் வாரந்தோறும் கொடுக்கப்படும் சம்பளப் பணம் யாது?

.................................................................................................

10) F பெறும் சம்பளப் பணத்தை A பெறுவதின் பின்னமாக எழுதுக?

.................................................................................................

★ இல 11 - 15 வரையயான வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தலுக்கமைய செயற்பட்டு விடையெழுதவும்.



11) தரம் 5 இல் நடைபெறும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையத் தவறின் பின் தரம் 6இல் இருந்து கொண்டு பரீட்சையை எழுதலாம் எனின், வட்டத்தின் கீழும் அவ்வாறு இல்லையெனின் வட்டத்தின் மேலேயும் கோடிடுக.

12) புலமைப் பரிசில் போட்டிப் பரீட்சையில் சித்தியடையும் எல்லா மாணவர்களுக்கும் உதவிப்பணம் கிடைக்குமெனின் சதுரத்தின் கீழாகவும் அவ்வாறு கிடையாது எனின், சதுரத்திற்குக் குறுக்காகவும் கோடிடுக.

13) பூனை, யானை அளவு பெரியது எனின், முக்கோணத்தினையும் அவ்வாறு இல்லையெனின் முக்கோணங்களையும் வெட்டிவிடுக.

14) நாய்க்கு எப்போதும் நன்றி உண்டு எனின் வட்டத்தினையும் நாய்க்கு எப்போதும் வால் இருக்குமெனின், செவ்வகத்தினையும் சுற்றிக் கோடிடுக.

15) இரண்டு இரட்டை எண்ணாகவும் முதன்மை எண்ணாகவும் அமையும் எனின், "T" என செவ்வகத்திற்கு அருகேயுள்ள கூட்டுக்குள் எழுதுக. அவ்வாறு இல்லையெனின் "S" என எழுதுக.

16) **SRIWARAN TRADERS** இதில் உள்ள எழுத்துக்களில் முகம் பார்க்கும் கண்ணாடியில் அவதானிக்கும் போது, மாற்றமின்றித் தெரியும் எழுத்துக்களின் எண்ணிக்கையை எழுதுக?

.................................................................................................

17) துளசி தான் வைத்திருந்த கணித்தல் பொறியில் ஓர் எண்ணை அடித்தபோது அங்கு எண் பெறுவதற்குப் பதிலாக LOOSE என்னும் சொல் பெறப்பட்டது. திகைத்த அவள் பின் சரியான எண்ணைப் பெற்றுக்கொண்டாள் அவள் பெற்றுக்கொண்ட எண்ணையும், அவள் அதனை எவ்வாறு பெற்றிருப்பாள் என்றும் எழுதுக?

.................................................................................................

**18) A-101 C-303 E-505 H-808** எனின் **L** இன் பெறுமதி யாதாகலாம்?

1) 10010 2)26026 3)12012 4)202

19) தொடர்பு சாதனம் எது?

1) வானொலி 2) கணனி 3)தொலைபேசி 4) தொலைக்காட்சி

20) பால்மாப் பேணி ஒன்றில் **Exp. Date** 03.08.03 என இருந்தது. இதை இப்போது

1) பயன்படுத்தலாம் 2) பயன்படுத்தமுடியாது

3) சிலவேளைகளில் பயன்படுத்தலாம் 4) கூறமுடியாது

★ பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் 'W' எனவும் பிழையாயின் 'R' எனவும் புள்ளிக்கோட்டில் எழுதுக.

21)நாம் உண்ணும் உணவும் சுவாசப்பையில் நன்கு அரைக்கப்படுகிறது. ( )

22)சோயாஅவரை, சிறிய கடல் மீன்கள் என்பன புரதச்சத்து நிறைந்த உணவுகளாகும் ( )

23) இலங்கையின் பொருளாதாரப் பயிர்களாக தேயிலை, இறப்பர், தென்னை என்பன விளங்குகின்றன. ( )

24)சமபக்க முக்கோணங்கள் இரண்டை இணைப்பதன் மூலம் சதுரம் ஒன்றைப் பெறலாம். ( )

25) இலங்கைக்கு தேயிலையை அறிமுகப்படுத்திய நாட்டவர் ஆங்கிலேயர் ஆவார் ( )

26) ஒரு பொருளின் வெப்பநிலையைக் கையால் தொட்டு அளக்கலாம். ( )

★ 27-30 வரையிலான வினாக்களில் மிகப்பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

27) 1 மணி 05 நிமிடங்களில் உள்ள நிமிடங்களின் எண்ணிக்கை

1) 65நிமி. 2) 05நிமி. 3) 35நிமி. 4) 60.05நிமி.

28) 420 இன் 1/6 பங்கு எவ்வளவு?

1) 35 2) 7 3) 80 4) 70

★ 7cm நீளமும் 3 cm அகலமும் உடைய செவ்வகப் பெட்டியில் இருந்து

29) அகலப் பக்கம் மாறாமல் வெட்டக்கூடிய சதுரங்களின் எண்ணிக்கை எத்தனை?

.................................................................................................

30) மீதமாக உள்ள பகுதி என்ன வடிவமுடையது? அதன் பரப்பளவு எத்தனை?

.................................................................................................

31) அருகே காட்டப்பட்டுள்ள சித்திரப் படத்தை கீழ்வரும் எப்பெயரால் அழைக்கலாம்



1) உண்மைச் சித்திரம்
2) கற்பனைச் சித்திரம்
3) ஒட்டுச்சித்திரம்
4) அலங்கார ஆக்கம்

**+x+=+, +x-=-, -x-=+** என்பதற்கிணங்க

**உண்மைXஉண்மை= உண்மை ஆயின்**

★ கீறிட்ட இடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தரப்பட்டவற்றவற்றில் இருந்து தெரிவுசெய்க.

32) உண்மை X பொய் =........................................................(உண்மை/பொய்) ஆகும்.

33) பொய் X பொய் =........................................................(உண்மை/பொய்) ஆகும்.

34)முற்பகல் 6.40 இற்கு வீட்டிலிருந்து புறப்பட்ட கபிலன் 10 நிமிட நடையில் தனது நண்பன் வீட்டை அடைந்தான். பின் அவனுடைய வீட்டில் 25 நிமிடங்கள் செலவுசெய்து தன் நண்பனுடைய சைக்கிளில் ஏறி சரியாக 10 நிமிடங்களின் பின் அவன் பாடசாலையை அடைந்தான். அப்போது பாடசாலை ஆரம்பிப்பதற்கு ஐந்து நிமிடங்கள் இருநதன எனில் பாடசாலை ஆரமபிககும் நேரம் யாது? அதனை நியம நேரத்தில் தருக?

.................................................................................................

35) ஒரு பாடசாலையில் 33 மாணவர்கள் வீதம் 7 வகுப்புக்களும், 35 மாணவர்கள் வீதம் 5 வகுப்புக்களும் 28 மாணவர்கள் வீதம் 4 வகுப்புக்களும் உண்டு எனில், பாடசாலையிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது?

.................................................................................................

36) தொடர்ந்து நடைபெற்ற புலமைப்பரிசில் பயிற்சிப்பரீட்சை ஒன்றில் தரம் 5 மணவன் ஒருவன் பெற்றுக்கொண்ட புள்ளிகள் 150, 158, 154, 162, 158, 166 இதன்படி அடுத்து நடைபெறும் பரீட்சையில் அம்மாணவன் பெறத்தக்க புள்ளி

1) 170 2) 190 3) 168 4) 162


37). பட்மின்ரன், ரேபிள் ரெனிஸ், சதுரங்கம், கரம் எனும் விளையாட்டுக்களுக்கு பொதுவான ஓர் இயல்பு உண்டு. பின்வரும் விளையாட்டுக்களில் இவ்வியல்பைக் கொண்டது எது?

1) கிரிக்கெட் 2) குத்துச்சண்டை 3) வலைப்பந்தாட்டம் 4) கூடைப்பந்தாட்டம்

38) ஒரு வாடகைக் கார் சாரதி 4 **Km** உம் அதற்குட்பட்டதுமான தூரத்திற்குச் செல்வதற்கு 50 ரூபாவைக் கூலியாகப் பெறுகிறார். 4 **Km** தூரத்திற்குப் பின் செல்லும் மேலதிகமான ஒவ்வொரு **Km** தூரத்திற்கோ, அதன் ஒரு பகுதிக்கோ 10 ரூபாவைக் கூலியாகப் பெறுகிறார். நீர் 8.5 **Km** தூரத்திற்கு இந்த வாடகைக் காரில் செல்வதாக இருந்தால் எவ்வளவு பணத்தினைக் கூலியாகக் கொடுக்கவேண்டும்?


1) ரூ. 110 2) ரூ. 100 3) ரூ. 90 4) ரூ. 85

39) வெற்றிடம் **A** யிற்கு திருத்தமான துண்டு




40. வெற்றிடம் B யிற்கு பொருத்தமான எண்

1.) 120
2.) 1200
3.) 100
4) 10



# கூட்டமைப்பதில் ஏற்பட்ட சிக்கலால் உட்கட்சி மோதல் உக்கிரம்

## விட்டுவிலக 28பேர் ஆயத்தம்! இக்கட்டில் ஜனாதிபதி

(கொழும்பு)

ஜே.விபிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் கூட்டணி



அமைக்கும் பேச்சு முறிவடைந்ததை யடுத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜே.வி.பி.யுடன் மீண்டும் பேச்சு வார்த்தை நடத்துமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 28 நாடாளு மன்ற உறுப்பினர்கள். ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமது கோரிக்கையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நிராகரிப்பாராயின் தாம் கட்சியிலிருந்து விலகி தனிக்குழுவாக இயங்கப் போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளனர் என பரவலாக செய்திகள் அடிபட ஆரம்பித்துள்ளன.

இதேவேளை, மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தலைமையில் இம்மனு தயாரிக்கப்பட்டு ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னாள் சபாநாயகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரா பண்டார நாயக்கா மற்றும் டிரோன் பெரேரா ஆனந்த அலுகமகே உட்பட்ட பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்துள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தனது நிலைப்பாட்டில் மாற்றங்களை கொண்டுவந்து அழைப்பு விடுத்தாலதேசியக் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு தாங்கள் தயாராக இருப்பதாக ஜே.வி.பி.யின் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ச கடந்த ஞாயிற்றுக்கிழமை பத்திரிகையாளர்கள் மத்தியில் தெரிவித்திருந்தமையும் இங்கு குறப்பிடத்தக்கது.

இதேசமயம், ஜே.வி.பி.க்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையில் கடந்த ஏழு மாதங்களாக இடம்பெற்ற கூட்டமைப்புத தொடர்பான பேச்சு கடந்த வெள்ளிக்கிழமை முறிவடைந்ததுடன், மேற்படி இரு கட்சிகளுக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் வலுப்பெற்றுள்ளதும் தெரிந்ததே. (உ-10)

## இன்று பாரதி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்லூரியில் தமிழ் மன்றம் நடாத்தும் 'மகாகவி பாரதி விழா' இன்று பி.ப 2.30மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரியின் யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள பட்டப் படிப்புகள் பிரிவில் இடம்பெறவுள்ளது.

கல்லூரியின் தமிழ் மன்றத் தலைவர் க.சுகாஸ் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில், ஆசியுரையை பேராயர் கலாநிதி சு.ஜெபநேசனும் அறிமுக உரையை பட்டப்படிப்புகள் பிரிவின் இயக்குனர் ஏ.குமாரவேலும் நிகழ்த்தவுள்ளனர்.

பிரதம விருந்தினரர்களாக கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறைத்தலைவர் பேராசிரியர் சி.மௌனகுருவும் கிழக்குப் பல்கலைக்கழக மொழியியற்றுறைப் பேராசிரியை சித்திரலேகா மௌனகுருவும கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (உ)

## பவளவிழா மலர்

(கொழும்புத்துறை)

யாழ்.அடைக்கல அன்னை ஆலய பவளவிழா மலர் நேற்று முன்தினம் யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சௌந்தர நாயகம் அடிகளாரால் வெளியிட்டு வைக்கப்பட்டுடள்ளது. (பி-51)

## விளைநிலம் விசமிகளால் நாசம்

## விவசாயி ம.உ.ஆ.கு.இல் புகார்

(யாழப்பாணம்)

விளைநிலத்தினுள் புகுந்த விசமிகள் குழு அங்கிருந்த பயன்தரும் நிலையிலிருந்த பயிர்களை நாசம் செய்திருப்பாதாக பாதிக்கப்பட்ட விவசாயி ஒருவர், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.உலுவலகத்தில். நேற்றையதினம் [illegible]றைப்பாடு செய்துள்ளார்.

கோப்பாய் தெற[illegible]ந்த தி.ஜெகதீஸ்வரன் என்ற [illegible] விவசாயி செய்துள்ள மேற்படி முறைப்பாட்டில்,

நேற்று முன்தினம் நள்ளிரவில், கோப்பாய் தெற்கு என்ற முகவரியில் அமைந்துள்ள எனது செய்கை நிலத்திற்குள் களவாகப் புகுந்த விசமிகள் குழுவொன்று, அங்கு ஆயிரம் நிலையத்தில் பயிரிடப்பட்டு பலனைப்பெறும் நிலையில்இருந்த வெண்டிச் செடிகளை வேரோடு பிடுங்கி எறிந்துதோட்டத்தை துவம்சம் செய்துள்ளனர்.

அது மட்டுமல்லாது, அப்பகுதியில் வைக்கப்பட்டிருந்த எனது பெறுமதிமிக்க விவசாய உபகரணங்களையும் இக்குழு சூறையாடிச் சென்றுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ-04)

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர் நியமனம் பிரதமர் இணக்கம் தெரிவிப்பு

## பா.உ.இரா.சம்பந்தன் தகவல்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகணங்களில் கடமையாற்றும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களை நிரந்தர நியமனம் ஆக்குவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இணங்கி இருப்பதாக தமிழ்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அலரி மாளிகையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், வடக்கு-கிழக்கு முஸ்லிம பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பிரதமருக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பில் இவ்விடயம் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டபோது இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

அவர்மேலும் கருத்துத் தெரிவிக்கையில், பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுள், க.பொ.த.(சா/த) தரத்தில் ஆங்கில பாடத்தில் திறமைச்சித்தி பெற்றவர்களுக்கு விசேட பயிற்சி ஒன்றை வழங்கியேனும், அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் என பிரதமரிடம் வலியுறுத்தினோம்.

இதனை அடுத்து அவர்களின் நியமனங்களை நிரந்தரமாக்குவது குறித்து விசேடகவனம் செலுத்துவதாகவும், அது தொடர்பாக கல்வி அமைச்சர் உட்பட அமைச்சின் உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதாகவும் பிரதமர் உறுதிவழங்கியதாக அவர் மேலும் தெரிவித்தார். (தி)

# மரபுடைந்து மக்கள்முன் வருபவை விடுதலைக்கு உரமூட்டும் இலக்கியங்கள்

## 'காலம் ஆகிவந்த கவிதைநூல்' வெளியீட்டில் பாலகுமாரன்

(மருதங்கேணி)

வடகக்கு-கிழக்கு மாகணங்களில் கடமையாற்றும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களை நிரந்தர நியமனம் ஆக்குவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இணங்கி இருப்பதாக தமிழ்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அலரி மாளிகையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், வடக்கு-கிழக்கு முஸ்லிம பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பிரதமருக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பில் இவ்விடயம் குறித்து பிரஸ்விக்கப்பட்டது.

அவர்மேலும் கருத்துத் தெரிவிக்கையில், பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுள், க.பொ.த.(சா/த) தரத்தில் ஆங்கில பாடத்தில் திறமைச்சித்தி பெற்றவர்களுக்கு விசேட பயிற்சி ஒன்றை வழங்கியேனும், அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் என பிரதமரிடம் வலியுறுத்தினோம்.

இதனை அடுத்து அவர்களின் நியமனங்களை நிரந்தரமாக்குவது குறித்து விசேடகவனம் செலுத்துவதாகவும், அது தொடர்பாக கல்வி அமைச்சர் உட்பட அமைச்சின் உயர்

தாகவும் பிரதமர் உறுதிவழங்கியதாக அவர் மேலும் தெரிவித்தார்.(தி)

நேற்று முன்தினம் நள்ளிரவில், கோப்பாய் தெற்கு என்ற முகவரியில்

டுள்ளது.

(உ-04)

# மாபெரும் விவசாயக் கண்காட்சி

## திருநெல்வேலியில் 3 தினங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்கள விரிவாக்கற் பிரிவும் விவசாய ஆராய்ச்சிப் பிரிவும கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களமும் இணைந்து நடாத்தும் மாபெரும் விவசாயக் கண்காட்சி எதிர்வரும் 18ஆம் திகதி முதல் 20ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

21ஆம் நூற்றாண்டுக்குரிய விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் என்னும் கருப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மேற்படி கண்காட்சியில் தினமும் காலை 9.00மணிமுதல் பி.ப 5.00மணிவரை திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சிநிலையம், விவசாய ஆராய்ச்சிநிலையம் மற்றும் செயற்கை முறை சினைப்படுத்தல் நிலையம் ஆகியவற்றில் இடம்பெறவுள்ளது.

வவசாயத் துறைசார்ந்த பலவேறு அம்சங்களுடன் பயிர்ச்செய்கை முறைகள், ஆராய்ச்சித் தகவல்க்ள் மற்றும் விலங்கு வேளாண்மை உளள்ட மற்றும் பல சிறப்பம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ள மேற்படி கண்காட்சியை பார்வையிட பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் எதிர்வரும் 18ஆம் திகதி யாழ்ப்பாணம் மற்றும் வலிகாமம் கல்விவலய பாடசாலைகளும், 19ஆம் திகதி வடமராட்சி கல்விவலயப் பாடசாலைகளும் இறுதி நாளான 20ஆம் திகதி தென்மராட்சி மற்றும் தீவகவலய கல்விவலயங்களும் கண்காட்சியை பார்வையிட முடியும்என தெரிவிக்கப்படுகிறது. (உ-18)

# மரபுடைந்து மக்கள்முன் வருபவை விடுதலைக்கு உரமூட்டும் இலக்கியங்கள்

## ‘காலம் ஆகிவந்த கவிதைநூல்’ வெளியீட்டில் பாலகுமாரன்

(மருதங்கேணி)

விடுதலை தொடர்பான இலக்கியங்கள் என்பது மரபுகளை மீறி வருபனவாகவே அமையும் என்று நேற்று முன்தினம் கிளிநொச்சியில் வெளியிட்டுவைக்கப்பட்ட ஆ.இரவியின் ‘காலமாகிவந்த கவிதைநூல்’ வெளியீட்டு நிகழ்வில் சிறப்புரையாற்றிய விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய பாலகுமாரன்,

விடுதலைப் போராட்டம் என்பது மரபுடைப்பது, கட்டுடைப்பது, தளையறுப்பது என்ற எல்லாவற்றையும் தாண்டி இலக்கணங்களையும் தாண்டி மீறி வருகின்றது.

அது தொடர்பான இலக்கியங்களும் அவ்வாறுதான அமைகின்றன. இருபதாம் நூற்றாணடில் பழைய செய்யுள் முறையில் இருந்து கவிதை கட்டுடைத்து எதுகை, மோனை அறுக்கப்பட்டத்து. கருத்தளவு அறுக்கப்பட்டது, புதிய கருத்துக்கள் புகுத்தப்பட்டன. சிறுகதை எனற வடிவம்கூட ஒரு புதிய பரிமாணமாகத் தான் உள்ளது.

புதுவையண்ணாவின் உலைக்களம் இன்னொரு வகையான கட்டுடைப்பு. இந்தப் படைப்பு என்பது சிறுகதைகளின் மீட்சி. இதுஒரு புதிய வடிவமாக மாறுகின்றது. அது குறுங்கதையுமல்ல நாவலுமல்ல இன்னொரு வடிவமாகும். இந்த வடிவத்தை தேடித்திரிந்தேன்.

தேசியத் தலைவருக்கும் தளபதிகளுக்கும், உங்களுக்கும், எங்களுக்கும், எல்லோருக்கும் நன்றி. சொல்லுகிறார்கள். எனக்கு மிகவும் பிடித்த சொல் வீரசெருக்கு என்ற சொல். நாங்கள் தேடிக்கொண்டிருநதோம். அது இப்போது கிடைத்துள்ளது. அது மாத்திரமல்ல இந்தப் போராட்டத்தினுடைய பலம், பலவீனம, தகுதி, தவறு அத்தனையோடும் அதனை நேசிக்கிறேன் என்று ஆசிரியர் கூறியுள்ளார். அது ஒரு பெரிய செய்தி அதாவது வருகை வலு தெளிவாக உள்ளது. (உ-35)

### கைதாகிக் காணாமல் போனோர் விவகாரம்

# பாதுகாவலர் சங்கம் விரைவில் ஜனாதிபதியைச் சந்தித்துப்பேசும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமல் போனோர் தொடர்பில், கைதாகி காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைச் சந்தித்து பேசவுள்ளது.

கடந்த 1995,1996ஆம் ஆண்டு காலப்பகுதியில் வடபகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டு நூற்றுக்கணக்கானவர்கள் காணாமல் போயிருந்தனர்.

இவர்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்த விளக்கம் பெறும் வகையிலும் அல்லது இவர்கள் பற்றிய திட்டவட்டமான முடிவை அறிவிக்கக் கோரியும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த வழிவகை செய்யுமாறு வடபகுதியில் கைதுசெய்யப்பட்டு காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம் கடந்த மாதம் ஜனாதிபதி செயலகத்திற்குக் கடிதமொன்றை அனுப்பி இருந்தது.

இக் கடிதத்திற்கு கடந்த 4ஆம் திகதியிட்டு ஜனாதிபதி செயலகம் பதில்கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அந்தக் கடிதத்தில், மேற்படி சந்திப்பிற்கான அனுமதியை ஜனாதிபதி வழ்ங்கியுள்ளதாகவும், அதற்கான காலம், நேரம், இடம் குறித்த விபரங்கள் விரைவில் அனுப்பி வைக்கப்படும். எனவும் குறிப்பிடப்பட்டிருபபதாக காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கத்தின் செயலாளர் எஸ்.சற்குணம் தெரிவித்தார்.(உ-04)

### காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம்

# பாராளுமன்றம் முன்பாக உண்ணாவிரதமிருக்க முடிவு

(யாழ்பபாணம்)

வடபகுதியில் கைதாகிக் காணாமல் போனோர் பாதுகாவலர் சஙகம், உலக மனித உரிமைகள் தினமான எதிர்வரும் டிசம்பர் மாதம் 10ஆம் திகதி அன்று பாராளுமன்றம் முன்பாக உண்ணாவிரதமிருக்க முடிவு செய்துள்ளது.

கடந்த 1996,1997ஆம் ஆண்டு காலப்பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான வடபகுதி இளைஞர், யுவதிகளின் நிலை என்ன என்பது குறித்து இதுவரை எந்தவித தகவலும் வழங்கப்படவில்லை.

இந்த நிலையில், தற்போதைய அரசாங்கத்தினது பொறுப்பற்ற தனத்தையும், சம்பவம் நடைபெற்ற காலப்பதியில் ஆட்சியில் இருந்த பொதுஜன ஐக்கிய முன்னணியின் மனிதஉரிமை மீறல்களும் அப்பட்டமாக வெளி உலகிற்கு எடுத்துக் காட்டாக இந்த உண்ணாவிரதத்தை மேற்கொள்ள உள்ளோம்.

இதற்கு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்பினை வேண்டி நிற்கின்றோம் என்று மேற்படி சங்கப்பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, கைதாகிக் காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்களின் பிள்ளைகளின் நிலை குறித்து பேச்சு நடாத்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இணங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-04)

அன்பு மாணவர்களே!
மிக விரைவில் எதிர்பாருங்கள்
உங்கள் வலம்புரியில்
குடாநாட்டின் முன்னணி ஆசிரியர்களால்
தயாரிக்கப்பட்ட கா.பொ.த (சாதாரண)
பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள்.

# இன்று ஒரு தகவல்

## நிறையும் குறையும்

இரண்டு வீடுகளில் உள்ள இரு மூதாட்டிகள் ஒரே சமயத்தில் வெளியே செல்ல ஆயத்தமானார்கள். ஒருவர் தான் செல்ல வேண்டி பாதையில் சென்றார். அவருக்கு எதிரே 3 பெண்கள் வந்தனர். ஒவ்வொரு பெண்ணையும் சந்தித்தபோதும் அந்தப் பெண் என்ன கூற வந்தாரோ அதற்கு இவர் பதில் கூறினார். திரும்பி வரும் போது சோர்ந்து போய் மிகவும் சோகமாக வந்தார்.

அடுத்த மூதாட்டி தனது பாதையில் சென்றார். அதே 3 பெண்கள் தனித்தனியாக அவரையும் சந்தித்தனர். அந்த 3 பெண்களிடத்தில் அவரும் பேசினார். ஆனால் இவர் திரும்பி வந்த போது மகிழ்ச்சியாக வந்தார்.

யார் இந்த 3 பெண்கள் ?இவர்கள் 3 பெண்கள் இல்லை! 3 காலங்கள். பெண்களாக வடிவமெடுத்து வந்தன. முதலில் வந்தவள் கோடை என்கின்ற பெண்! அந்தப்பெண்ணைப் பார்த்தவுடன் முதல் மூதாட்டி கூறினார். "நீ எப்போதும் கொதிப்பாக இருக்கிறாய்! நீ எப்போதும் கடுமையாகச் சுடுகின்றாய்" என்றார்.

இரண்டாவது மூதாட்டி அதே பெண்ணைப்பார்த்த போது கூறினார் "ஆகா ! கோடைகாலம் எவ்வளவு அழகான காலம் தெரியுமா? குளிர்காலம் நீங்கி அடுத்ததாக வரக்கூடிய உன்னை நாங்கள் வரவேற்கின்றோம்! நீ வந்தவுடன் தான் வசந்தம் வருகின்றது. நீ வருகிறாய் என்பதால்தான் மலர்கள் மலரத் தெடங்குகின்றன. செடி, கொடிகள் எல்லாம் காய்த்துக்குலுங்குகின்றன" என்றார்.

இரண்டாவதாக வந்தவர் மழைக்காலம் என்கின்ற பெண்! அந்த மழைக்காலம் என்கின்ற பெண்ணைச் சந்திக்க போது முதல் மூதாட்டி கூறினார். "ஐயோ! நீ எப்போதும் கொட்டித் தீர்க்கிறாய். நீ வந்து விட்டால் நாங்கள் வெளியில் கால் வைக்கவே முடிவதில்லை. உன்னிலேயே நனைய வேண்டியுள்ளது. நீ வந்தால் அந்த இடம் சகதியும் சேறுமாக ஆகிவிடுகின்றது" என்றார்.

இரண்டாவது மூதாட்டி இதே மழைப்பெண்ணைச் சந்தித்த போது கூறினார். "நீதான் செடி, கொடிகளுக்கெல்லாம் உயிர் கொடுக்கின்றாய். நீ வந்து விட்டாய் என்று தெரிந்தவுடன் பயிர்கள் எல்லாம் விளையத்தொடங்குகின்றன. ஆகா நீ எவ்வளவு மகிழ்ச்சியைத் தருகின்றாய்" என்றார்.

மூன்றாவதாக வந்த பெண் குளிர்காலம் என்கின்ற பெண். குளிர்காலத்தைப் பார்த்தவுடன் முதலாவது மூதாட்டி கூறினார் "நீ மிகவும் குளிர்கின்றாய். நீ எங்களையெல்லாம் நடுங்கவைக்கின்றாய். நீ ஏன் வருகின்றாய் என்று நாமெல்லாம் வெறுப்படைகின்றோம்" என்றார்.

இரண்டாவது மூதாட்டி இதே குளிர் காலத்தை பார்த்துக் கூறினார் "நீ வந்தால் நாங்கள் எல்லாம் போர்வைக்குள் அமர்ந்து கொள்கின்றோம். போர்வைக்குள் சுருண்டு கொள்கின்றோம். ஆனால் அடுத்தது என்ன செய்ய வேண்டும் என்று யோசித்துக்கொள்கிறோம். நாங்கள் மழையில் நனைந்து தவித்துப் போயிருக்கும் போது குளிர்காலமான நீ வந்தவுடன் நாங்கள் ஓய்வொடுத்துக் கொள்வதற்காக அந்த நேரத்தைப் பயன்படுத்துகின்றோம். சிந்தனைகளைத் தெளிவு படுத்திக்கொள்வதற்காக அந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றோம்" என்றார்.

முதல் மூதாட்டியாக நாம் இருக்கப்போகின்றோமா? அல்லது இரண்டாவது மூதாட்டியாக இருக்கப்போகின்றோமா? என்பது தான் வாழ்க்கையை வளப்படுத்த நினைக்கும் ஒவ்வொரு மனிதனது கேள்வியாக இருக்க வேண்டும்.

எப்படி தெரியுமா? முதல் மூதாட்டி யாரைப்பார்த்தாலும் அவர்களிடத்தில் இருக்கக்கூடிய தவறுகளை மட்டுமே கண்டார். ஆனால் இரண்டாவது மூதாட்டி கோடையிலே நன்மையைப்பார்த்தார். மழையில் நன்மையைப் பார்த்தார். குளிரிலேயும் நன்மையைப்பார்த்தார்.

காலங்கள் என்பவ்வ மட்டுமல்ல, வாழ்க்கையில் எதுவாக இருந்தாலும் அதில் குறையும் உண்டு. நிறையும் உண்டு. நிறைகளைப்பார்த்து அந்த நிறைகளையே வாழ்க்கைக்கு உரியதாய் எடுத்துக் கொள்வோமாக இருந்தால் வாழ்க்கை வளமாக இருக்கும். என்பது தான் இம் மூதாட்டிகளின் கதை எமக்குத் தரக்கூடிய அனுபவம். இந்த அனுபவத்தை எடுத்துக் கொண்டால் நமது வாழ்க்கையும் வளப்படும்!

டாக்டர் சுதா

## தே.கத்தோலிக்க எழுத்தாளர் சங்கம் நடத்தும் இலக்கியப் போட்டிகள்

(கொழும்புத்துறை)

தேசிய கத்தோலிக்க எழுத்தாளர் சங்கம், கத்தோலிக்கப் பாடசாலை மாணவர்களுக்கான இலக்கியப் போட்டிகளை நடத்தவுள்ளது. போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்கள் அதிபரின் உறுதிப்படுத்தலுடன் 500 சொற்களிற்கு மேற்படாத கதைகள், கட்டுரைகளை இம்மாத முடிவுக்குள பொதுச் செயலாளர், தேசிய கத்தோலிக்க எழுத்தாளர் சங்கம் பேராயர் இல்லம் பொரளை கொழும்பு-08 என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே சமயம், எந்த வயதினரும் பங்குகொள்ளும் சிறுகதைப் போட்டியும் நடைபெறவிருக்கின்றது. கிறிஸ்தவ விழுமியங்களை வெளிக்கொணர்வதாக 1100 சொற்களிற்கு மேற்படாமலும், குறையாமலும் எழுதி மேற்படி முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். வெற்றியீட்டும் மூவருக்கு பணப்பிரிசும் சான்றிதழ்களும் வழங்கப்படும் என மேற்படி போட்டிகளின் ஏற்பாட்டாளர் அருள் மா.இராசேந்திரன் தெரிவித்துள்ளார். (பி-51)

# ஐ.நா.பொதுச் சபைக்கூட்டத்தில் உரையாற்றும் வாய்ப்பு பிரதமருக்கு

## இலங்கைத் தூதர் உறுதி செய்தார்

(கொழும்பு)

இம்மாத இறுதியில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக்கூட்டதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே உரையாற்றுவார் என ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான தூதுவர் என்.பி. மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதற்கான ஏற்பாடுகள் யாவும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும்தெரிவித்தார்.

இதேவேளை, மேற்படி கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே உரையாற்றுவார் என அறிவிக்கப்பட்டிருந்த போதும், இக்கூட்டத்திற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாகவும் இதனால் ஜனாதிபதியே அங்கு உரையாற்ற வேண்டும் எனவும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்திருந்தது.

இதனையடுத்து, ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக்கூட்டத்தில் ஜனாதிபதியா, பிரதமரா பேசுவது என்ற சர்ச்சை தோன்றியிருந்தது.

இந்நிலையிலேயே, ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான தூதுவர் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

இதேவேளை ஐ.நாவின் ஆயிட்ஸ் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஐக்கியநாடுகள் சபையால் ஜனாதிபதிக்கு அனுப்பபட்டுள்ள அழைப்பு அவரிற்கு கிடைக்காமல் போனமை குறித்து பல்வேறு சர்ச்சைகள் தோன்றியிருந்தன.

இம் மாநாட்டில் கலந்து கொள்வது குறித்த வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவிற்கும், ஜனாதிபதிக்கும் இடையில் கடுமையான இழுபறிநிலை ஏற்பட்டிருந்தமையினையடுத்தே ஐக்கிய நாடுகள் சபையினால ஜனாதிபதிக்கு அனுபப்பட்ட அழைப்பிதழ் கிடைக்காமல் போனதாகத்தெரிவிக்கப்படுகிறது.

இக்கடிதம் ஜனாதிபதிக்கு கிடைக்காமல் போனதற்கான காரணம் குறித்து ஆராயப்பட்டு வருவ



தாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இம்மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுவதற்கான வாய்ப்பினை ஜனாதிபதியே பெறுவார் என்றும் இராஜதந்திர வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-10)

# அரசை வீழ்த்தும் எண்ணத்துடனேயே எதிர்க்கட்சிகள் செயற்படுகின்றன

## பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை வீண்போகாது, இவ்வரசாங்கத்தை வீழ்த்த வேண்டும் என்ற எண்ணத்துடன், எதிர்க்கட்சிகளும் இனவாத சக்திகளும் சமாதானத்தை சீர்குலைத்து, நாட்டில் மீண்டும் யுத்தத்தை ஏற்படுத்த முயற்சி செய்து வருகின்றன.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன மாத்தறையில் நடைபெற்று வரும் கண்காட்சி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர், இவ்வாறான சக்திகளுக்கு இடம் கொடுக்காத வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டை நிர்வகித்துச் செல்வதுடன், மக்களைப் பாதுகாத்துச் கொள்ளவும் நடவடிக்கை எடுத்துள்ளார்.

எதிர்கட்சிகளினால் நடத்தப்படும் ஆர்ப்பாட்டங்கள், கண்டனப் பேரணிகள் என்பனவற்றுக்கு எதிராக ஐக்கிய தேசிய முன்னணி அரசு எதுவித நடவடிக்கையினையும் எடுக்கவில்லை மாறாக இப்போராட்டங்களுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகளையே செய்திருந்தது. இதனால் அவர்கள் எதிர்பார்த்தளவு எந்தவித இடையூறுகளும் ஏற்படவில்லை.

அதிகரித்து வரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பொலிசா அதிக கூடிய கவனம் செலுத்திவருகிறார். இக்குற்றச் செயல்களின் பின்னணியில் பாதாள உலகக் கோஷ்டியினர் இருப்பதாக தெரிவிக்கப்பட்டாலும், முற்றுமுழுதாக அவை அரசியல் பின்னணியிலேயே நடைபெறுகின்றன.

இதனால் நாட்டுக்கு பாரிய அழிவு ஏற்படுமே தவிர, ஆட்சி அதிகாரங்களைக் கைப்பற்றும் சூழ்நிலை உருவாக மாட்டாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

### இராசி பலன்

**10. 09. 2003**

**(ஆவணி 24, புதன்)**

**பூரணை- மு. இ. 10.43 வரை**

**சதயம் - பி.ப. 4.38 வரை**

**இராகுகாலம் - 12.03 - 01.33**

**சுபநேரம் - 04.33- 06.03**

**சித்தாமிர்தம், பூரணைவிரதம்**

**மேடம்**

குடும்ப மகிழ்ச்சி, தனலாபம், எடுத்த காரியம் கைகூடும், நல்ல செய்தி

**இடபம்**

மேன்மை உற்சாகம், தொழில் அபிவிருத்தி, முயற்சி கைகூடும்.

**மிதுனம்**

மனப்பயம், உறவினர் உதவி, காரிய தாமதம், வேலைப்பளு

**கடகம்**

பிரயாண பயம், வீண்தொல்லை, உடல் வியாதி, போசன நன்மை.

**சிங்கம்**

தெய்வசிந்தை, குடும்பநலன், திடீர் பயணம், கலந்துரையாடல்.

**கன்னி**

தொழில் விருத்தி, நல்லசெய்தி , காரிய நன்மை, பிரயாணம்.

**துலாம்**

தெய்வ அனுகூலம், உறவினர் சந்திப்பு, திடீர் நன்மை, சொத்துப் பிரச்சினை.

**விருச்சிகம்**

தன்னம்பிக்கை குறைவு, மாதா சுகம், விரோதம், புதிய திருப்பம்.

**தனுசு**

மனமகிழ்ச்சி, சுபகாரியம், தனவரவு, உறவினர் வருகை.

**மகரம்**

எந்தக் காரியத்திலும் தாமதம், வீண் செலவு, விவாதம், உடல்நலக் குறைவு.

**கும்பம்**

பெரியோர் ஆதரவு, முயற்சி பலிதம், பிரயாண நன்மை, போசன சுகம்.

**மீனம்**

மனஸ்தாபம், தொழில்திருப்தி, அதிக செலவு, உடற்சோர்வு.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# தேர்தல் சீர்திருத்தம் தொடர்பாக ஆலோசனைக் கூட்டங்களை முஸ்லிம் கட்சிகள் நடத்த வேண்டும்

(கொழும்பு)

தேர்தல் சீர் திருத்தங்கள் தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டுள்ளதால் முஸ்லிம் அரசியல் கட்சியில் தமது பிரதிநிதித்துவங்களை உறுதி செய்து கொள்ளும் ஆலோசனைக்கூட்டங்களை நடத்த வேண்டும் என வடக்கு-கிழக்கு மாகாண முஸ்லிம் எம்.பிக்களின் ஒன்றியத்தின் செயலாளர் ஏம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா கோரிக்கை விடுத்துள்ளார்.

தேர்தல் சட்ட மூலத்தில் திருத்தங்கள் கொண்டு வருவதற்கான பாராளுமன்றத் தெரிவுக்குழு கடந்த மாதம் 22ஆம்திகதி நியமிக்கப்பட்டது.

இந்நிலையில், சிங்கள- தமிழ் மொழி மாகாணங்களில் வாழும் முஸ்லிம்களை கருத்தில் கொண்டு முஸ்லிம் அரசியல் கட்சிகள் தமது பிரதிநிதிகளை உறுதி செய்து கொள்ளும் ஆலோசனைக் கூட்டங்களை நடத்துவது அவசியமாகும்.

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம் பிரதிநிதிதுவத்திற்கும், ஏனைய பிரதேச முஸ்லிம்களின் பிரதிநிதித்துவத்திற்கும் பங்கம் ஏற்படாத வகையில் இவ் ஆலோசனைக் கூட்டங்கள் முன் வைக்கப்பட வேண்டும் எனவும் கோரியுள்ளார். (தி)

# குறிஞ்சா தீவு உப்பளம் குறுகிய நிலையில்

(கொழும்பு)

1990 ஆம் ஆண்டிற்கு முன்னர் வடக்கில் மிகப்பெரிய உப்பளமாக விளங்கிய குறிஞ்சா தீவு தற்போது நாட்டின் உப்புத் தேவையின் 15 வீதத்தினை நிறைவு செய்துவருகின்றது என அதன் தலைவர் வேலாயுதபிள்ளை தெரிவித்துள்ளார்.

கடந்தகாலப் போரினால் சேதமடைந்திருந்த மேற்படி உப்பளத்தை புனரமைக்கவென யுனிசெப் அமைப்பு 8.4 மில்லியன் ரூபாவை வழங்கி உதவியது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இக் குறிஞ்சாத் தீவு ஆனையிறவிலிருந்து 10 கிலோமீற்றருக்கு அப்பால் 100 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. 1990ற்கு முன்னர் ஆண்டொன்றிற்கு 85, 000 மெட்றிக்தொன் உப்பை உற்பத்தி செய்துவந்தது. மகாத்மா காந்தியின உப்புச் சத்தியாக்கிரகத்தைத் தொடர்ந்து. பிரிட்டிஷ் அரசு 1958ல் இதற்கென ஒரு திணைக்களத்தினை நிறுவி இலங்கையின் சகல உப்பு கைத தொழிலின் ஏகபோக உரிமையை தமக்கு கீழ் கொண்டுவந்தனர். பின்னர் இது 1966ல் கூட்டுத்தாபனமாக்கப்பட்டது. 1990 வரை இலங்கையின் சகல உப்பளங்களும் இக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமாக இருந்து வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-6)

விளைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.
- குறள்

## வலம்புரி

### தளர்வுற்ற பின் உபதேசம்

நாட்டின் தற்போதைய நிலையில் அரசு இக்கட்டான சூழ்நிலைக்குள் சிக்குண்டுள்ளது. இவ்வாறு தெரிவித்திருப்பவர் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் முக்கிய அமைச்சரான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ்.

அமைச்சர் பீரிஸ் தெரிவித்த இக்கட்டான சூழ்நிலை என்பது பல்வேறு விடயங்களைப் பல்வேறு கோணங்களில் இருந்து நோக்கியதன் வாயிலாகக் கூறப்பட்டதென்பதை உணர முடிகிறது. குறிப்பாக விடுதலைப் புலிகள் இடைக்கால சபைக்கான திட்டவரைபைத் தயாரித்து அரசுக்குச் சமர்ப்பிக்கவுள்ள நேரத்தில் அதனை ஏற்கும் நிலையில் அரசு இல்லை என்பதை வெளிப்படுத்துவதாக அமைச்சர் பீரிஸ் கூறிய சிக்கலைக் கருதிக் கொள்ள முடியும். அதேநேரம் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் போது எதிர்க் கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து அம்முயற்சிகளைக் குழப்பியடிக்கத் திட்டமிட்டிருப்பதால். அரசின் ஆயுளுக்கு ஆபத்து உண்டு என்பதை வெளிப்படுத்துவதாகவும் பீரிஸ் கூறிய சிக்கலுக்கு பொருள் கொள்ள முடியும்.எதுவாயினும் அமைச்சர் பீரிஸ் கூறிய சிக்கல் என்பது மனச் சோர்வின் வெளிப்பாடாக ஏற்பட்ட வார்த்தை என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

ஏனெனில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் நடந்த போது, அரசின் ஆயுளைத் தீர்மானிக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடம் இருக்கும் வரை இனப்பிரச்சினைக்கான தீர்வை ஐக்கிய தேசிய முன்னணி அரசால் எட்ட முடியுமா? என்ற கேள்வியை புலிகளின் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அமைச்சர் பீரிஸிடம் கேட்டிருந்தார்.

இதற்குத் துணிவோடு பதிலளித்த அமைச்சர் பீரிஸ் அரசின் பலத்தைப் பொறுத்திருந்து பாருங்கள்.வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்படும் போது அரசின் பலம் நிரூபிக்கப்படுமென உறுதியளித்தார். எனினும் வரவு செலவுத் திட்டம் அவர் கூறியது போல பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்படவில்லை.

பொது ஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது பக்கம் தாவுவார்கள் என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையிலேயே அமைச்சர் பீரிஸ் துணிவோடு பதிலளித்தார். ஆனால் பொது ஜன ஐக்கிய முன்னணி எம்.பிக்கள் அரசின் பக்கம் தாவவில்லை. இது ஐ.தே.முன்னணி அரசுக்குப் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்தது.

இவ் ஏமாற்றத்தின் வெளிப்பாடாகவே அரசு பெரும் சிக்கலை எதிர் நோக்கியுள்ளதென்ற அமைச்சர் பீரிஸின் கருத்து தொனிக்கிறது.

# பழிதீர்க்கக் காத்திருக்கும் மிதிவெடிகள் குறித்து விழிப்பாக இருப்பது பொதுமக்களின் கடமை

## மேலதிக அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எமது மக்களின் கரங்கள் மற்றவர்களிடம் கையேந்தும் கரங்களாக இருக்கக்கூடாது. மாறாக, மற்றவர்களுக்கு வாரி வழங்கும் கரங்களாக மாறவேண்டும்.

மிதிவெடியால் பாதிப்புற்ற குடும்பங்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கும் நிகழ்வு, நேற்று முன்தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றபோது, அதில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பத்தினியம்மா திலநாயகம் போல் தெரிவித்துள்ளார்.

யுனிசெவ் அனுசரணையுடன் சர்வோதயத்தினால் நடாத்தப்பட்ட இந் நிகழ்வில் யாழ்.மாவட்ட மிதிவெடி செயற்பாட்டுக்குழுவின் இணைப்பதிகாரி எல்மோ ஆனந்தராஜா, யாழ்.மாவட்ட சர்வோதய இணைப்பாளர் க.கனகரட்ணம் மற்றும் பல உயரதிகாரிகள் கலந்துகொண்ட இந் நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய மேலதிக அரசாங்க அதிபர்,

போர் மறைந்து சமாதான ஒளியை மக்கள் எதிர்பார்த்திருக்கின்ற இந்த வேளையிலும், எம்மைப் பழிதீர்ப்பதற்காகக் காத்திருக்கும் மிதிவெடிகள் குறித்து மக்கள் விழிப்பாயிருக்க வேண்டும்.

இது ஒருபுறமிருக்க, மிதிவெடியினால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு உதவுவது அவசியம். அந்த அடிப்படையில் தொண்டு நிறுவனங்கள் பலவும் உதவிக் கரங்களை நீட்டி வருகின்றன.

தொடர்ந்தும் உதவிகளை எதிர்பார்க்கின்ற சூழலை இக் குடும்பங்களுக்கு உருவாக்காது அவர்களும் தமது சொந்தப் பலத்தில் நிற்கத்தக்க வகையில் சுய வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதும் இந்த உதவிக் கரங்களை நீட்டுகின்றவர்களின் பெறுப்பாகவுள்ளது.

திட்டமிட்ட செயற்பாடுகள் மூலம் இந்த இலக்கை எய்தமுடியும் என்றார். (உ-04)

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அதிகாரப் பரவலாக்கல் அவசியம்

## ஜனாதிபதியின் கூற்றுக்கு பேராசிரியர் வரவேற்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணபதற்கு அதிகாரப் பரவலாக்கல் அவசியம் என்றவகையில் ஜனாதிபதி அண்மையில் தெரிவித்துள்ள கருத்துப் பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடப் பேராசிரியர் எச்.சிவசேகரம் வரவேற்றுள்ளார்.

நேற்று முன்தினம் காலை செய்தி நிறுவனம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அதிகாரப் பரவலாக்கல் அவசியம் என்ற ஜனாதிபதியின் கருத்தை நான் முழுமையாக வரவேற்கிறேன்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அதிகாரப் பரவலாக்கலைப் பயன்படுத்துவதன் மூலம் பெருமளவு நன்மைகளைப் பெற முடியும. அத்துடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதில் ஜனாதிபதியினதும் சகல அரசியல் கட்சிகளினதும் ஆதரவை அரசு பெற்றுக் கொள்ளவேண்டும்.

அதேசமயம் இத்தருணத்தில் சகல அரசியல் கட்சிகளும் மிகவும் புத்தி சாதுரியத்துடன் நடந்துகொள்ள வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (தி-10)

# தொழிற்சங்க வாதிகளுக்குப் பயிற்சி அளிக்க இணக்கம்

(கொழும்பு)

தொழிற்சங்க வாதிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்கான நிலையம் ஒன்றை ஆரம்பிக்க தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க இணங்கியுள்ளார்.

தொழில் அமைச்சரிற்கும் அகில இலங்கை அரசாங்க ஆசிரியர் சங்கத் தலைவர் எம்.ஏ.கண்டியப் பெரேரா தலைமையிலான குழுவினருக்கும் அண்மையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையினைத் தொடர்ந்தே அமைச்சர் மகிந்த சமரசிங்க இவ் இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளார்.

இதன்படி நாட்டில் உள்ள ஆயிரத்து 500 பதிவுசெய்யப்பட்ட தொழிற் சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு 2 வருடகால பயிற்சியை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அகில இலங்கை அரசாங்க ஆசிரியர் சங்கத்தலைவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சர்வதேச தொழில ஸ்தாபனத்தின் உதவியுடன் ஆரம்பிக்கப்படவிருக்கும் இப் பயிற்சி நிலையத்திற்கென உறுகொடவத்தையில் காணி ஒன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (உ-10)

# சார்க் உச்சிமாநாடு ஜனவரி 4ல் ஆரம்பம்

(கொழும்பு)

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமபாத்தில் அடுத்த வருடம் ஜனவரிமாதம் 4ஆம் திகதி நடைபெறவுள்ள 12 வது சார்க் உச்சிமாநாட்டில் கலந்துகொள்ளுமாறு இலங்கைக்கு உத்தியோக பூர்வ அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து இருநாட்கள் நடைபெறவுள்ள இம் மாநாட்டில் ஜனாதிபதி சந்திரிக குமாரதுங்க கலந்து கொள்ளவுள்ளார்.

அத்துடன், சனிக்கிழமை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் இம் மாநாட்டிற்கான ஏற்பாடுகள் பற்றிக் கலந்துரையாடுவார் என இலங்கைக்கான பாகிஸ்தான் தூதரகம் அறிவித்துள்ளது. (தி)

## திசைரி தியானம்

### தெய்வீகப் புதையல்

கடவுள் உங்கள் உள்ளத்தில் வசிக்கிறார். உங்களுக்கு மிக அருகில் உள்ளார். அவரது தத்துவம் மிக எளிமையானது. சேவை செய்யுங்கள், பிறரை நேசியுங்கள், இறைவனைப் பாடுங்கள். தியானியுங்கள். ஆகவே அவரது மார்க்கத்தில் சேருங்கள்.

உண்மைக்கு அழிவே இல்லை. பொய் வாழ்வதில்லை. அன்பு அழிவதில்லை. வெறுப்பு நிலைத்திருப்பதில்லை. பேரின்பத்துக்கு அழிவில்லை. துன்பம் தொடர்வதில்லை பிரம்மத்துக்கு முடிவில்லை. உண்மை பேசி அனைவரையும் நேசித்து பிரம்மத்தை உணரலாம். இத்தகைய தெய்வீகப் புதையல் உங்களிடமே உள்ளது.

சுவாமி சிவானந்தர்

தெற்காசிய நாடுகள்

# போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த இணக்கம்

(கொழும்பு)

போதைப்பொருள் பாவனையை இல்லாது ஒளிப்பதற்கான சீரான திட்டமொன்றை வகுப்பதற்கு தெற்காசிய நாடுகள் இணங்கியுள்ளன.

இதற்காக வகுக்கப்படவேண்டிய சட்டங்கள், மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இது தொடர்பாக அண்மையில் நேபாளத்தின் தலைநகர் காட்மண்டுவில் நடைபெற்ற உச்சிமாநாட்டில் ஆராயப்பட்டன.

போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்துவதறகாக தற்போதைய சட்டதிட்டங்களில் மாற்றம் கொண்டு வரப்படவேண்டியதன் அவசியம் பற்றியும் இம்மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது. (தி)

# அமைச்சர்கள் கொலைச் சதி விசாரணை அறிக்கை பூர்த்தி

(கொழும்பு)

காணிஅமைச்சர் ராஜித சேனாரட்ண, வர்த்தக அமைச்சர் ரவி கருணாநாயக்கா ஆகிய இருவரையும் படுகொலை செய்வதற்கான சதித்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் முன்னேற்றம்பற்றிய அறிக்கை எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு நீதிவான் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், தற்போது விளக்கமறியலில் உள்ள பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்த நாவல நிகாலை விசாரணை செய்த குற்றப் புலனாயவுப் பிரிவினர், அவரிடம் இருந்து நம்பகமான பல தகவல்களை பெற்றுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை, மேற்படி இரு அமைச்சர்களையும் கொலைசெய்ய பாதாள உலகக் கோஷ்டியினர் சிலர் முனைந்து வருவதாக பத்தேகம அஜித் நிஸாந்த தெரிவித்த தகவலை அடுத்து, குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இதுதொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமையும் நாவல நிகால், பத்தேகம அஜித் நிஸாந்த ஆகிய பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்த இருவர்களும் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையும் தெரிந்ததே. (உ-10)

## தீவக வளம்பேணும் அமைப்பு

# மாடுகளைப் பாதுகாக்க தீவகத்தில் பண்ணை அமைப்பு

(ஊர்காவற்றுறை)

தீவுப்பகுதியில் உள்ள கட்டாக் காலி மாடுகளைப் பாதுகாக்கும் பொருட்டு அங்கு பண்ணை ஒனறு அமைக்கப்படவுள்ளதாக தீவக வளம் பேணும் அமைப்பு தெரிவித்துள்ளது.

காரைநகர் நெடுந்தீவு, வேலணை, அனலைதீவு, புங்குடுதீவு, ஊர்காவற்றுறை, மண்கும்பான் ஆகிய பிரதேசங்களில் சுமார் 10ஆயிரத்திற்கும் மேற்பட்ட கட்டாக்காலி மாடுகள் காணப்படுகின்றன.

இம்மாடுகளை வைத்து பண்ணை ஒன்று அமைப்பதன் மூலம் தீவக வழத்தை காப்பாற்ற முடியும் என்றும தீவக வளம் பேணும் அமைப்பு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இதேவேளை, தீவகப் பிரதேசங்களிலுள்ள மாடுகளை கட்டுபபாடின்றி இறைச்சிக்காக வெட்டு வது மற்றும் மாடுகளை கடத்தி விற்பனை செய்வது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவோரிற்கு எதிராக கடும் தண்டனை வழங்கப்படும் எனவும் வளம்பேணும் அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. (தி-75)

# அரசின் சமாதான முயற்சிகள் திருப்தி அளிப்பதாக உள்ளது

(கோலாலம்பூர்)

மிக நீண்ட காலமாகப் பேரழிவுகளை ஏற்படுத்திப் பல்லாயிரக் கணக்கான அப்பாவிகளது உயிர்களைக் குடித்த கொடிய யுத்தத்தை முடிபுக்குக் கொண்டு வந்து சமாதான முயற்சிகளை இலங்கை அரசு முன்னெடுத்து வருவது திருப்தி தருவதாக மலேசியப் பிரதமர் மஹதிர் முகமது, இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடம் தெரிவித்துள்ளார்.

இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு மலேசியா சென்றிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மலேசியப் பிரதமரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் அவரைச் சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

சுமார் ஒரு மணி நேரம் வரை இரு பிரதமர்களும் சுமுகமான முறையில் கலந்துரையாடினார்கள்.

பிராந்திய ரீதியில் ஒரே எண்ணத்தில் இணைந்து செயற்படக்கூடிய ஓர் அமைதியான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது பிராந்திய ரீதியில் சில நல்ல முடிவுகளை எடுக்க வேண்டியிருப்பின் அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்றும் மலேசியப் பிரதமர் கேட்டுக் கொண்டார். (ம)

# வட்டு.அம்மன் ஆலயத்தில் தங்கத் தகடுகள் திருட்டு

(சங்கானை)

வடடுக்கோட்டை கிழக்கு புரட்டிப் பனை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நேற்று முன்தினம் இரவு விக்கிரகங்கள் புரட்டப்பட்டு அதற்குக் கீழிருந்த இயந்திரத் தகடுகள் தங்க நகைகள் என்பன திருடப்பட்டுள்ளன.

இத்திருட்டுச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது;

மேற்படி ஆலயத்தில் வைரவர் சுவாமி உட்பட எட்டு விக்கிரகங்கள் பிரதிட்சை செய்யப்பட்டுள்ளன.

திருட்டுக் கோஷ்டியினர் வைரவர் சுவாமி விக்கிரகத்தைப் புரட்டாமல் ஏனைய விக்கிரகங்களைப் புரட்டி அதற்குக் கீழிருந்த இயந்திரத் தகடுகள், தங்க நகைகளை திருடிச் சென்றுள்ளனர்.

அத்துடன் புரட்டப்பட்ட விக்கிரகங்களின் கண்களும் கட்டப்பட்டுள்ளன. இச்சம்பவம் குறித்து மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி ஆலயம் தொடர்பில் யாழ்.நீதிமன்றில் வழக்கொன்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(இ-216)

## அரசு மாற்றம் செய்தால்...

குற்றப்பையே அல்லது நீக்கும் தன்மையையோ ஏற்படுத்த முற்பட்டால் சமாதானப் பேச்சுக்களில் இருந்து புலிகள் அடியோடு விலகுவதற்கான சாத்தியக் கூறுகள் தென்படுவதாக இராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை அரசாங்கம் புலிகளின் இடைக்காலக் கோரிக்கையை ஏற்க மறுத்தால், அல்லது அதில் திருத்தங்கள் செய்தால் புலிகள் வேறு வழியின்றி தமிழ் மக்களின் உரிமையை போராடிப் பெற வேண்டிய நிலைக்கே திரும்ப வேண்டி வருமென்று விடுதலைப் புலிகளின் மட்டு-அம்பாறை மாவட்டச் சிறப்புத் தளபதி கேணல் கருணா தெரிவித்தமையும் இங்கு சுட்டிக் காட்டத்தக்கது.(இ)

## செல்வச்...

யில் திடீரென தேர்ச் சகடையின் அச்சு உடைந்ததனால் தேர் சரிந்தது.

இவ் சம்பவத்தினால் பக்தர்கள் பெரும் அதிர்ச்சியடைந்தனர்.

இதேவேளை நேற்று இடம்பெற்ற கொக்குவில் பொற்பதிப் பிள்ளையார் ஆலயத் தேர்த் திருவிழாவின் போது, பிரதம குருக்கள் தேரில் ஏறும் போது சறுக்கி விழுந்த நிகழ்வும்.

கோண்டாவில் மகா கணபதிப் பிள்ளையார் ஆலயத் தேர்த் திருவிழாவில் தேர் சரிந்த நிகழ்வும் இடம் பெற்றுள்ளது.

இந் நிகழ்வுகளால் அடியார்கள் பெரும் மனக் குழப்பமடைந்துள்ளனர்.

(இ-43)

# தமிழ் - முஸ்லிம் பிரதிநிதிகள் திரும்பவும் சந்தித்துப் பேசுவர்

(கொழும்பு)

கிழக்கு மாகாண பாதுகாப்புத் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் நேற்று முன் தினம் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பின் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் முஸ்லிம் காங்கிரஸின் பிரதிநிதிகள் மற்றும் வடக்குக் கிழக்கு மாகாண முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியப் பிர்திநிதிகள் ஆகியோர் மீண்டும் கூடி இதுவிடயமாக ஆராய்வதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

பிரதமருடனான நேற்றைய சந்திப்பை அடுத்து இரா.சம்பந்தன் மேலும் தெரிவித்திருப்பதாவது;

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் மலேசியாப் பயணம் முடிவுற்று நாடுதிரும்பிய பின் மீண்டும் சந்தித்துப் பேசவிருக்கின்றோம்.

அதற்கு முன்பதாக இவ்விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் கூடி ஆராய்ந்து சில முடிவுகளை எடுவுள்ளோம் என்று தெரிவித்துள்ளார்.

(ம)

## 5ம் தர புலமைப் பரீட்சை வினாத்தாள் - 33

மாணவர் முழுப்பெயர்:.......................................

பாடசாலையின் பெயர்:.......................................

வீட்டின் முகவரி:.......................................

மாணவர்களே! உங்கள் விடைகளை 17.09.2003இற்கு முன் அனுப்பி வைக்கவும். உங்கள் விடைகளுடன் கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

குறிப்பு:-மாணவர்களின் நலன்கருதி இவ் வினாத் தாள்களை வைத்துக் கொண்டு, வினாக்களுக்கான விடைகளை வேறு ஒரு தாளில் எழுதி கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும். வினா இலக்கங்களை சரியாக

வலம்புரி
கல்விப்பகுதி,
15,வெள்ளாந் தெரு,

## சமாதானப் பேச்சுக்களில்...

நாம் தீர்மானிக்கவில்லை என்றும் பிரதமர் கூறினார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அண்மையில் காவல்துறை தலைமயகம் ஒன்று புலிகளால் திறந்து வைக்கப்பட்டமை குறித்து செய்தியாளர் ஒருவர் கேட்டபோது; இனிமேல் ஆரம்பிக்கப்படவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது ஆச்சரியத்திற்குரிய விடயமாக இருக்கமாட்டாது.

அரசும் விடுதலைப் புலிகளும் ஒருவரோடு ஒருவர் சண்டை செய்யாது நீண்ட தூர சமாதானப் பயணத்தை மேற்கொண்டுள்ளோம். எதுவாயினும் விடுதலைப் புலிகள் விட்டுக் கொடுப்புடன் பேச்சுவார்த்தை மேசைக்கு வருவார்கள் என்றே நான் நம்புகிறேன் என்றும்

# சங்காபிஷேகம

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நிறுவப்பட்டிருக்கும் வித்தக விநாயகர் மற்றும் முடிமன்னர் வைரவர் ஆலயத்தின் சங்காபிஷேகம நாளை இடம் பெறவுள்ளது.

இவ் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் கடந்த மாதம் 31ந் திகதி நடை பெற்றது.

(இ)

முன் அனுப்பி வைக்கவும். உங்கள் விடைகளுடன் கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

குறிப்பு:-மாணவர்களின் நலன்கருதி இவ் வினாத் தாள்களை வைத்துக் கொண்டு, வினாக்களுக்கான விடைகளை வேறு ஒரு தாளில் எழுதி கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும். வினா இலக்கங்களை சரியாக குறிப்பிடவும். பாடசாலையின் பெயரினை முழுமையாக எழுதவும்.

வலம்புரி
கல்விப்பகுதி,
15,வெள்ளாந் தெரு,
யாழ்ப்பாணம்.

பிரதமர் கூறினார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அண்மையில் காவல்துறை தலைமயகம் ஒன்று புலிகளால் திறந்து வைக்கப்பட்டமை குறித்து செய்தியாளர் ஒருவர் கேட்டபோது; இனிமேல் ஆரம்பிக்கப்படவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது இத்தகைய சிக்கலான விடயங்கள் கவனத்தில் எடுக்கப்படும் என்று கூறிய பிரதமர் சமாதானப் பேச்சுக்கள் முன்னோக்கி நகரும் போது தடைகள் ஏற்பட்டாலும் அது இருக்கமாட்டாது.

அரசும் விடுதலைப் புலிகளும் ஒருவரோடு ஒருவர் சண்டை செய்யாது நீண்ட தூர சமாதானப் பயணத்தை மேற்கொண்டுள்ளோம். எதுவாயினும் விடுதலைப் புலிகள் விட்டுக் கொடுப்புடன் பேச்சுவார்த்தை மேசைக்கு வருவார்கள் என்றே நான் நம்புகிறேன் என்றும் கூறினார்.

(ம)

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நிறுவப்பட்டிருக்கும் வித்தக விநாயகர் மற்றும் முடிமன்னர் வைரவர் ஆலயத்தின் சங்காபிஷேகம நாளை இடம் பெறவுள்ளது.

இவ் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் கடந்த மாதம் 31ந் திகதி நடைபெற்றது. (இ)

## தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் சங்கமம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்களின் சங்கமம் எதிர்வரும் 13-ம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

தேசிய எழுச்சிப்பேரவையின் யாழ்ப்பாணப் பிரதேசச் செயலாளர் எஸ். சிவஞானசேகரம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறையினர் பங்கு கொண்டு உரையாற்றவுள்ளனர்.

அதேவேளை,நல்லூர் பிரதேசத்துக்கான பேரவையின் சங்கமம் மறு நாள் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (உ-16)


அருணா குளிர்களியகம்

மந்திகைக் கிளை

திறப்பு விழா

இன்று (10.09.2003) புதன்கிழமை காலை 11.30 மணி தொடக்கம் 1.00 மணி வரையுள்ள சுபவேளையில் மந்திகை வைத்திய சாலைக்கு அருகாமையில் முற்றிலும் குளிரூட்டப்பட்ட அருணா குளிர்களியகம் கோலாகலமாகத் திறந்து வைக்கப்படுமென்பதை எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

மந்திகைச் சந்தி,
புலோலி.

பி.நல்லதம்பி
உரிமையாளர்

[C/6629]



இதயபூர்வமான வாழ்த்துக்கள்



அநுராதபுரம் மாவடியைப் பிறப்பிடமாகவும், இருபாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய பொதுச் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தரும் சமூக சேவைக்காக அர்ப்பணிப்புடன் பல சமூக சேவை அமைப்புக்களில் உயர் பதவி வகித்து வருபவரும், பிறர் துயரைத் தன் துயரென நினைத்து அவர்களுக்காகப் பாடுபடும் அன்புள்ளம் கொண்டவருமான

உயர்திரு.
கிருஸ்ணபிள்ளை தங்கவடிவேல்

யாழ் மாவட்ட மேலதிக நீதிபதி உயர்திரு பா.சுப்பிரமணியம் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

சமூக சேவையாளரான இவர் மேலும் பல உயர் பதவிகளைப் பெற்று பல்லாண்டுகள் இச் சமூகத்திற்கு சேவையாற்ற எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிக்க வேண்டுமென்று பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

அன்புடன்
எஸ். விஜயரூபன்
ஆர். ரகுமார்
ஈ.ஏ. ஜெயன்

கோப்பாய் தெற்கு

[C/6631]



மங்களகரமான திறப்பு விழா

இன்று(10.09.2003) புதன்கிழமை காலை 10.00 மணி தொடக்கம் 12.00 மணி வரையுள்ள சுபவேளையில் எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட

நாகபூசணி நகையகம்

எனும் ஸ்தாபனம் மிகக் கோலாகலமாக திறந்து வைக்கப்படவுள்ளது என்பதை மிக மகிழ்ச்சியுடன் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

41
கண்டி வீதி,கைதடிச் சந்தி,
கைதடி.

உரிமையாளர்
சி.கு.சிவசுப்பிரமணியம் சிவசுதன்

இணை நிறுவனம்:
மகாநதி ஜுவல்லறி
72A
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

[C/6630]


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.09.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது